॥ श्रीः ॥

॥ श्री दयाशतकम् ॥

ஸ்ரீ தயாசதகம்

தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புகளுடனும்

குறிப்புகளுடனும் கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

சென்னை

விலை ரூ. 10/-

श्रीकामकोटिग्रन्थावलिः २५

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

श्री अय्यावाळ् इति प्रसिद्धैः

श्रीधरवेङ्कटेशाभिधैः विरचितम्

॥ श्री दयाशतकम् ॥

द्रमिडाङ्ग्लानुवादसहितम्

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीकामकोटिपीठाधीश्वर
श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासितम्

श्रीकामकोटिविजयदे

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितम्
५७, पश्चिम उत्तर वीथी, कुम्भघोणम्

[स्वाम्यं कोशस्थानस्यैव]

Rs 10/-

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி—25

ஸ்ரீ:

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ ஸ்ரீதரவேங்கடேசர் என்ற ஸ்ரீ அய்யாவாள்

இயற்றிய

ஸ்ரீ தயாசதகம்

தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளுடனும்
குறிப்புகளுடனும் கூடியது

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ காமகோடி
பீடாதீச்வர ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர
ஸரஸ்வதீ ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய
திவ்ய ஸ்ரீமுகத்துடனும் கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேலடபீர் வீதி, கும்பகோணம்

28—3—49

பதிப்புரிமை] **Rs 10/-**

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ॥

श्रीशहजिराजपुर (तिरुविशनल्लूर्) अग्रहाराभिजनाः श्रीधर-वेङ्कटेशार्याः अय्यावाळाख्याविख्यातयशसः सर्वेश्वरभक्ताग्रेसराः अनन्यभक्तिसभाजनसम्प्रसन्नबालेन्दुमौळिदयाप्रादुर्भूतस्वशरणाङ्कणविद्यमानकूपोल्लसद्विष्णुपदीप्रख्यापितभक्तिप्रभावाः स्तुतिमणिमालां कामपि भक्तिकाञ्चनसूत्रग्रथितां सम्पाद्य भगवन्तमीशं समभाजयन्निति सुविदितमेव स्यादेतत्समेषामास्तिकानाम्। तादृशस्तुतिमणिमालायां मध्यमणिरूपेण भासमाने यत्र "आस्य जानन्तः", इत्यादि श्रुतिप्रसिद्धम्, "सततं कीर्तयन्तो माम्", इत्यादिस्मृत्यनुसृतम्, "नाम्नोऽस्ति यावती शक्तिः पापनिर्हरणे हरेः। तावत्कर्तुं न शक्नोति पातकं पातकीजनः॥",

इत्यादिवचनोपबृंहितं च, भगवन्नामानुसंधानस्यानितरसाधारणं शङ्करदयासम्पादनसामर्थ्यम्, "आस्यामृतोर्मिरसिकास्त्वपरेऽभिनन्दन्त्यस्ताघयः", "क्षिप्त्वेव दासयसि देवि दये तमेनं ह्रा जिह्वयैतदभिधास्पृशि पुल्कसेऽपि", "शम्भो त्वमेव शरणं मम चन्द्रचूडेत्यावा गिरस्तदुश्चिरतास्थितिहानितो नः", इत्यादिना भक्तजनतामात्रस्याधिकारसूचकं परिदृश्यते, तत्तादृशस्य सरळमधुरपदवाक्यार्थस्य देशभाषामयपदवाक्यार्थानुवादसनाथस्य आङ्गलभाषामयविवरणोपेतस्य दयाशतकाख्यग्रन्थमणेः नामानुसन्धानादिभक्त्या भगवन्तमाराध्य तद्दयामधिगन्तुमुत्सुकानां भक्तानां सर्वेषामुपकाराय मुद्रापणप्रचारणयोः प्रवृत्तास्सन्ति श्रीकामकोटिकोशस्थानाधिकारिण इत्येतदमन्दमानन्दं सञ्जनयति । असत्सन्निधावुपहृतस्यास्य ग्रन्थमणेर्धारणश्रवणादिना सर्वेश्वरं सेवमानाः भक्ताः, एवं भक्तलोकस्योपकुर्वन्तश्श्रीकामकोटिकोशस्थाननिर्वाहकाश्च श्रीचन्द्रमौळीशदयापात्रभूतास्सन्तः श्रेयांसि प्राप्नुवन्त्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
मध्यार्जुनक्षेत्रम्
सर्वधारि सं॰ माघबहुल दशमी.

नारायणस्मृतिः

ஸ்ரீ:

ஸ்ரீமுகம்

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களான ஸ்ரீமச் சங்கரபகவத் பாதர்களால் ப்ரதிஷ்டை செய்யப் பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அதிபதிகளான ஸ்ரீமச் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

ஸ்ரீ சஹஜிராஜபுரம் என்ற திருவிசநல்லூர் அக்ரஹாரத்தில் பிறந்து ஸ்ரீ அய்யாவாள் என்று புகழ் பெற்ற ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசரென்ற மஹான் எல்லாம் வல்ல இறைவனின் பக்தர்களுள் முதன்மைபெற்று, நிகரற்ற பக்தியினால் ப்ரஸன்னமான சந்த்ரசூடனின் கருணையால் தன் வீட்டு முற்றத்திலிருக்கும் கிணற்றில் கங்கையைத் தோன்றச் செய்து பக்தியின் பெருமையை வெளியாக்கி,. அபூர்வமான துதிரத்னங்களை பக்தியாகிய ஸௌவர்ண நூலில் மாலையாகத் தொடுத்து பகவானை வழிபட்டார் என்பது ஆஸ்திகர்களனைவரும் அறிந்ததே.

அவ்விதத் துதி மாலையில் நடுநாயகமாக விளங்கும் எதில் "ஆஸ்ய ஜாநந்த:" என்ற மந்திரத்தில் ப்ரவஸித்த மானதும், "ஸததம் கீர்த்தயந்தோ மாம்" என்ற ஸ்ம்ருதியை யொட்டியதும்,

"நாம்நோ'ஸ்தி யாவதீ சக்தி: பாபநிர்ஹரணே ஹரே: |
தாவத்கர்தும் ந சக்நோதி பாதகம் பாதகீ ஜந:" ||

என்ற வசனத்தைக் கொண்டும், பகவந்நாம ஸங்கீர்த்தனம்

சங்கரனுடைய கருணையைப்பெற ஈடில்லா ஸாதனமென்பது, "ஆக்யாம்ருதோர்மிரஸிகாஸ்த்வபரே'பிநந்நந்ய ஸ்தாதய:" என்பது முதலிய வசனங்களால் (கடவுளின் கருணைபெற) ஜன சமுதாயத்திற்கே உரிமையுள்ளது எனவும் நன்கு விளங்குகிறதோ, அவ்வித "தயாசதகம்" என்னும் நூல் எளிய இனிய பதவுரை, பொழிப்புரை, தமிழ், ஆங்கில அநுவர்த்தங்களுடனும், கருத்துரையுடனும் வெளிவரவேண்டுமெனவும், பக்தியோடு நாமோச்சாரணம் செய்து கடவுளை வழிபட்டு அவர் கருணையை அடைய ஆவல் கொண்ட பக்தர்களனைவர்க்கும் உதவி செய்பவும் ஸ்ரீ காமகோடி கோசஸ்தான நிர்வாகிகள் அதை அச்சிட்டு ப்ரசுரிக்கின்றனர் என்பது அதிக ஆனந்தத்தை அளிக்கிறது.

நமது பார்வைக்கு வந்த இச்சிறந்த நூலை தாமே பாராயணம் செய்வதின் மூலமோ, கேட்பதின் மூலமோ இறைவனை ஸேவிக்கின்ற பக்தர்களும், இங்ஙனம் பக்தகோடிகளுக்கு பேருதவி புரிகின்ற ஸ்ரீ காமகோடி கோசஸ்தான நிர்வாகிகளும் ஸ்ரீ சந்த்ரசூடனின் கருணைக்குப் பாத்திரர்களாகி ஸகலச்ரேயஸ்ஸை அடையட்டுமென ஆசீர்வதிக்கின்றோம்.

விஜயயாத்ராஸ்தானம்
மத்யார்ஜுன க்ஷேத்திரம்
ஸர்வதாரி, மாகபஹுள தசமீ

நாராயணஸ்ம்ருதி:

முகவுரை

ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேச 'அய்யாவாள்' அவர்களின் தயாசதகம் என்ற பக்திநூலை இங்கு ஆங்கில, தமிழ் அநுவாதங்களுடனும், குறிப்புகளுடனும் தந்திருக்கிறேன். இதற்குமுன் காமகோடி கோசஸ்தானத்தில் நான் வெளியிட்ட ஆக்யாஷஷ்டிப் பதிப்பில் அய்யாவாளின் வாழ்க்கை, நூல்கள் முதலியவற்றைப்பற்றி விரிவாய் எழுதியிருக்கிறேன்; ஸ்ரீ வீரராகவ வ்யாக்யானத்துடன் வெளியிட்ட ஆக்யாஷஷ்டிப் பதிப்பின் ஆங்கில முகவுரையையும் பார்க்கவும்.

பின் குறிப்பிட்ட முகவுரையில் ஸ்ரீ அய்யாவாளைப் பற்றிய பாட்டொன்றை வெளியிட்டிருந்தேன். அது நூலமங்கலம் ஸ்ரீ கோபாலக்ருஷ்ணர் என்பார் ஸ்ரீ அய்யாவாளின் பேரில் செய்த எட்டுப்பாட்டுக்களடங்கிய ராகமாலிகையின் ஒரு பகுதி என்று ஸ்ரீ ஆஞ்ஜனேயர் அவர்கள் தெரிவித்தனர். ஸ்ரீ ஆஞ்ஜனேயர் மூலமே அந்த ராகமாலிகை முழுவதையும், அத்துடன் திருவாரூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவராமாச்ரம ஸ்வாமிகள் ஸ்ரீ அய்யாவாள் பரமாய் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய பாட்டொன்றையும் இப்பதிப்பில் சேர்த்திருக்கிறேன்.

ஸ்ரீ அய்யாவாள் தம் நூல்களிலும், வீரராகவர் தம் உரையிலும் வற்புறுத்தியிருக்கும் ஹரி-ஹர-அபேதத்தை ஒட்டி, இந்த கோபாலக்ருஷ்ணர் செய்த பாட்டுகளிலும் ஸ்ரீ அய்யாவாளை ஹரி-ஹர மூர்த்திகள் சேர்ந்து ஒரு ரூபமாய் பக்தியையும் நாம ஜபத்தையும் பரப்ப அவதரித்த மஹா புருஷர் என்று சொல்லியிருப்பதும், நாம ஸித்தாந்தம் ச்ருதிஸ்ம்ருதி ஆதாரங்களுக்கு ஸம்மதமானதென்ற விஷயத்தை ஸ்ரீ அய்யாவாள் விசார ரூபமான க்ரந்தமாக எழுதினர் என்று சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கன.

வே. ராகவன்

|| श्रीः ||

ஸ்ரீ கோபாலக்ருஷ்ணர்

ஸ்ரீ அய்யாவாள்

பேரில் தெலுங்கில் செய்த ராகமாலிகை

1

केदारगोलरागः—आदिताल:

(प) भक्ते श्रीधरवेङ्कट गुरुवर्यरूपमुग मह्लिचेलगे (भक्ते)

(अनु) मुक्तिभुक्तुलकु कारणमगु चिन्मूर्तियन्दु निण्डु प्रेमगल
शिव (भक्ते)

(च) फालमन्दु त्रिपुण्ड्रमुनु त्रेळ्ळनु धरिञ्चु सूत्रमुन् तम
नालुकन् शिवुनि नाम प्रेमलोल मुखोल्लासमै वेलयु
शिव (भक्ते)

हरिहरुलोकरूपमै धरनवतरिञ्चि तम्मु नम्मु सुजनुल
नरयुचुन् पूर्णभक्त्यनुग्रहमिरवुगा करुणिञ्चि चल्लजेसिन
(भक्ते)

वेदमे सुरसालमै धरवेलयु दानुण्डि पण्डु जार शु-
कादुलनु प्रोलुनट्टि कीर्तिसुखात्मकुडौ कृष्णुपोन्दुजेसिन
(भक्ते)

2

काम्भोजीरागः—त्रिपुटतालः

(प) मी चरणभक्तिमिश्च विच्चमडिगिन ना-
लोचनजेसे त्रिलोचनडु ॥ मी ॥

(अनु) वाचि बतिमालि पादमुलकु म्रोक्किन ननु
क्रोचवड जूचेनु श्रीगुरुमणि देवर गतियनि ॥ मी ॥

(च) मेमु वारनि कोन्त मेरजेयु नी बुद्धि
कैमन्दु ननि यिट्ल येन्दुकु नीकु राम
नाममे तारकमनि दलचुचु मिगुले
तामसिञ्चक ब्रह्ममे सत्यंबनुचु येञ्चवले गानि ॥ मी ॥
अन्तरिकि ने नन्तर्यामियैन नलुवकु
पोन्दरानट्टि गुरुभक्त्यानन्दमु नी
यन्दु करुणिञ्चनण्टे तोचलेदिक
नेन्दुकु विचारपडेदवु गो-
विन्दयनि पलुकवलेगानि ॥ मी ॥
वञ्चनलेक गोपालकृष्ण नाममु की-
र्तिञ्चिन विनि तानालिङ्गिंचन प्रेम-
मिञ्चि श्रीधर वेंकटेश्वर महिम विनु-
तिञ्चगन आ ह्रुदिनि मैपुळ-
किञ्चिनदि येमो मीके तेलुसुनुगानि ॥ मी ॥

3

काम्भोजीरागः—आदितालः

(प) स्वामी मीरे गतियनि प्रेमदलतुनय्या ॥ स्वामी ॥

(अनु) पामरतनु मानि भिम्मु परमप्रयोजनमुगानु मनसुन ॥
स्वामी ॥

(च) करुणनु मनु जूचे देवरकन्नुले गतियय्या—आ-
दरणनभयमिच्चे देवरकरमुले गतियय्या श्रीगुरु ॥
स्वामी ॥

मुदमलरगजेसे देवरवदनमे गतियय्या—ना
हृदयमु चल्लगजेयु देवरपदमुले गतियय्या—श्रीगुरु ॥
स्वामी ॥

विनि हरिकथ चोक्के देवरवीनुले गतियय्या
अनयमु हरिकीर्तिञ्चु श्रीवागमृतमे गतियय्या—
श्रीगुरु ॥ स्वामी ॥

श्रुतिसारमु हरिनाममनि आश्रितुलकु बोधिञ्चि—श्री
पति हृदयमु वासंबुजेयु भाग्यमुलिप्पिञ्चे—श्रीगुरु ॥
स्वामी ॥

चल्लनि मागोपालकृष्ण स्वामि करुण अम्मि—ने
गोल्लग मीपदपङ्कजमुले गुरुतुगा नेरनम्मि—श्रीगुरु ॥
स्वामी ॥

4

भैरवीरागः—त्रिपुटतालः

(प) मनसा श्रीधर वेङ्कटेश्वर गुरुनि महिमलु दलचुकोम्मि ॥
मनसा ॥

(अनु) मुनुनीवु चिरकालमुनु श्रीहरिकीर्तन
जेसिनन्दुकु फलमनुचु यिदे परमतारकमनि ॥ मनसा ॥

(च) कलिकल्मष मुलेल्ल दीरु—निन्नु
कलुगजेसेडु मायनु चालवोरु—बहु
सुलभमुग भक्तिमीरु—हृदि
सुखंबनि मरेवरुनु तेलियलेरु नीवुकोरि तेलिय ॥
मनसा ॥

दिनदिनमुनु नीवे जेरि—वारि
दिव्य श्रीचरणमुलने कोरि—मेटि
धनमु चेय्यब्बिन दारि—यी
दोरतनमु नीवे कोल्लाडि सारे येमारियुण्डक ॥
मनसा ॥

आपदलणचु दैवंबु—श्रीघ-
रार्य वेङ्कटेश्वररूपंबु—बूनि
तापहेतुवौ अज्ञानंबु - बो-
गोट्टि हितवुगा नीयन्दु प्रेमनिवासंबुगा निरतंबुजेयु ॥
मनसा ॥

श्रीपतियगु मा गोपाल-कृष्णुनि
चिन्तिञ्चगनु गुरुभक्तिये वेळ—गलुगु
नीपट्ळ दैवानुकूल—मैयुण्डुनु
निजमुगा नम्म मीसंशय मेलनिक नी लोन मेलुकोवे ॥
मनसा ॥

5

शंकराभरणरागः—जम्पतालः

(प) गुरुमूर्तिपादमुले गुरुतुगा ध्यानिञ्चि
स्थिरमैन सुखमु बोलेदनु ॥ गुरु ॥

(अनु) हरिहरुलिरुवरु नोकरनुचु भक्तियु सेय
नररूपमैन श्रीधरवेङ्कटेश्वर श्री ॥ गुरु ॥

(च) रामनाममु ननुरागमु बुट्टिञ्चि
प्रेमतो तम भक्तिके युनिकि जेसि
येमरकनिट्टि मधुराक्षरमे तारकमनि
महिम देलिपि नन्नु रक्षिञ्चिन श्रीधर ॥ गुरु ॥

चिन्तचे चलुगाक जोन्द्र नेनुन्नरीति
यन्तयुनु तेलिसि गुरुडन्तरङ्गमुन
सन्ततमुनङ्गु भगवन्तुनि दलचमनि य
नन्तुनि कल्याणगुणमन्दु नन्नु तेलिञ्चु श्रीधर ॥ गुरु ॥

श्रुतिधर्मशास्त्र सम्मतिनि हरिनाममे
गति यनुचु रूढमगु ग्रन्थमु जेसिन
अतुलितुडु श्रीवेङ्कटार्युडे नेजेयु
कृतिलोनु गोपालकृष्णुडै तोन्चिन श्रीधर ॥ गुरु ॥

6

कल्याणीरागः—आदितालः

(प) विण्टिरा जनुलार श्रीधरवेङ्कटेश्वर गुरु महिमलु हा

(अनु) मुक्कण्टि देवुडु मनयन्दु साक्षात्-
करिञ्चि नररूप मोन्दिन कथलु ॥ विण्टिरा ॥

(च) रामनाममु नोड्डुचु नियतमुग
नारदादि योगीन्द्रुललेने
प्रेम मिञ्चि भक्ति जेयु गेहल
प्रियमु जेसि भाषिन्तुरु
भूमिलो मनवण्टिवारलकु
बोधिंपुमु तण्ड्रयनुचु वेडिन
श्रीमनोहरुनि नाम मुपदे-
शिन्तुरु वो धन्युलैन मीरलु ॥ विण्टिरा ॥

सावधानमुग विनुडि मा गुरु-
स्वामि चरित मेल्ल विनिनमी

भाव मन्दु तनकु ताने पूर्ण
भक्ति निण्डि मनसु चल्लनौनु
पावनंबगु मी मनसु नतनि
पावमु लोकटि जेसुकोनि कुल-
दैवताराधनंबु जेयुडि सं-
देह मेन्तैन तोयवलदिक ॥ विण्टरा ॥

भवुनि नाममु भौमि येडल त-
त्परुलयन्दु प्रेमयुनो नर—मा-
धवुनि वार्तलन्य न्यवार्तल
विरक्तुलै युन्दुरु
भावसुननु गोपालकृष्णुनि
भजनमु जेयुचुण्डवारल
श्रोतुरु श्रीधरवेङ्कटे-
श्वर लनुचुनिपुडु वसुधलो ॥ विण्टरा ॥

7

कल्याणीरागः—रूपकताल:

(प) मनसु पोयिन त्रोवपोनियनि विडिच्चिते
नेम्मदि येट्ल बुट्टुनय्या

(अनु) घनुलगु श्रीधर वेङ्कटेश्वर श्रीगुरुमूर्तिनि
अनयमु दल चेडु भक्तुलेवरो वारोकरु ॥ मनसु ॥

(च) वशवृत्तिनिजन्दनि दुःखमुले सुखमुलनि—दु-
र्दशचेतनु भोगिञ्चन मनसु—धी
दशनै ननु शिव शिव शिवायनि गुरुमूर्तिनि
पशुपतिनि सभापतिनि भजिञ्चनि नरपशुवरैना ॥
मनसु ॥

येन्नेन्नि विषमुल विषयसुख परंपरलनु गनि
अन्नसियु तोचलेकने मनसु मरि मरि
कष्टुलगनि यलमेकलकैवडि भोगिञ्चिकडकु
दृष्निपु क्षणभङ्गुर मनियेञ्चक नरपशुवलेना ॥ मनसु ॥

ज्ञानाज्ञानंबुननुत्तम जन्ममुगल शिवरसिकुललो
ज्ञानरसमु वेतगुवारोकरु विना—मरि
गानमु अन्तटि रसिकुलकद्दनि दोरिकियु वलदनि
श्वान रति सुखमुगनि आसैन नरपशुवलेना ॥ मनसु ॥

अनयमु गोपालकृष्णुनि भजनमु सेयुटकंटे
श्री गुरुनाम स्मरणमे क्षिप्रफलंबनि
मनसुनि भजिञ्चिन नेम्मदि बुट्टुन आयुर्वृद्धियु संपदकु
इनि तेलिसियु तेलियनि नरपशुवलेना ॥ मनसु ॥

श्री कमलालय पश्चिमतीरस्थ यज्ञेश्वरमठस्थितैः

श्री शिवरामाश्रमि स्वामिभिरनुगृहीता

॥ श्री श्रीधरवेङ्कटेशसंस्कृतस्तुतिः ॥

(प) श्रीधर वेङ्कटेशं स्मराम्यहम्
श्रीधर वेङ्कटेशम् ॥

(अनु) साधु जन हितोपदेशिकं मद्देशिकम् ॥ श्रीधर ॥

(च) वरभस्माङ्कितगात्रम्
हरनामजपसूत्रम्
हरविनिहितनेत्रम्
हरकृपारसपात्रम् ॥ श्रीधर ॥

कलितनामसिद्धान्तम्
दलितदुरितध्वान्तम्
ज्वलदादित्यचक्रान्तम्
फलितविज्ञानस्वान्तम् ॥ श्रीधर ॥

शिवचिन्तनविलोलम्
शिवकथोदधिखेलम्
शिवरामाश्रमपालम्
शिवकैवल्यानुकूलम् ॥ श्रीधर ॥

॥ श्रीः ॥

॥ श्री श्रीधरवेङ्कटेशविरचितं दयाशतकम् ॥

ஸ்ரீதர வேங்கடேசர் அருளிய
தயாசதகம்

श्रेयांसि संदिशति कन्दलयत्यमन्द-
मानन्दमस्य दलयत्यघबृन्दमार्तीः ।
धूनोति किंकरयति द्रुहिणादिकांश्च
मातस्तवैष उदयो हि दये पुरारेः ॥ १ ॥

ச்ரேயாம்ஸி ஸந்திசதி கந்தலயத்யமந்த-
மானந்தமஸ்ய தலயத்யகப்ருந்தமார்த்தீ: ।
தூநோதி கிங்கரயதி த்ருஹிணாதிகாம்ச்ச
மாதஸ்தவைஷ உதயோ ஹி தயே புராரே: ॥ 1 ॥

हे मातः அன்னையே! **पुरारेः दये** சிவனுடைய தயையே! **तव** உன்னுடைய **एषः** இந்த **उदयः हि** எழுச்சி **श्रेयांसि** நன்மைகளை **संदिशति** கொடுக்கிறது; **अमन्दम् आनन्दम्** பெருங் களிப்பை **कन्दलयति** முளைவிட்டெழச் செய்கிறது; **अस्य** இந்தப் பக்தனுடைய **अघ-वृन्दम्** பாபக்கூட்டத்தை **दलयति** தவிர்க்கிறது; **आर्तीः** துன்பங்களை **धूनोति** சிதறச் செய்கிறது; **द्रुहिण-आदिकान् च** ப்ரம்மன் முதலிய தேவர்களையும் **किंकरयति** வேலையாட்களாய்ச் செய்கிறது.

சிவனுடைய தயையைப் பற்றி நூறு ச்லோகங்களில் ஸ்துதி செய்ய ஆரம்பித்த கவி முதல் ச்லோகத்தில் மொத்தமாய் அந்தத் தயையின் மஹிமையைக் குறிக்கிறார்.

கருணை என்ற பாவத்தின் ஸ்வபாவத்தை யொட்டி அதை அன்னையாக பாவித்துப் புகழ்கிறார். பக்தரின் பாபங்களைப் பொறுத்து, அவர்களுடைய இன்னல்களை நீக்கி, அவர்களை நல் வழியில் செல்லவைத்து, இம்மையிலும், மறுமையிலும் அவர்கள் நன்மையை அடையுமாறு செய்யவல்லது கடவுளின் தயை ஒன்றே. 'புராரே:' என்று சிவனை இங்குக் குறித்ததால் த்ரிபுரத்தை எரித்த சிவனின் புன்னகை எப்படியோ அதுபோன்றது சிவனின் தயையும் என்று த்வனிக்கிறது. சிறிதேயாயினும், குளிர்ச்சியானதும் இனிமையானதுமான சிவதயை, சிவஸ்மிதம்போல் தாப த்ரயங்களான பெரும் தீங்கையும் எளிதில் போக்கவல்லது.

1. O Mother, Compassion of Siva! This rise of yours sends to this (devotee) welfare, makes keen joy sprout in him, smites at the multitude of his sins, blows away his miseries and makes even gods like Brahma his slaves!

कल्याणि शैलतनयाकमनानुकम्पे
त्वं यत्रयत्र वितनोषि पदार्पणानि ।
प्रागेव पद्मजवलोन्मथनादिलक्ष्म्यः
प्रादुर्भवन्त्यवहिताः खलु तत्रतत्र ॥ २ ॥

கல்யாணி சைலதநயாகமநாநுகம்பே
த்வம் யத்ரயத்ர விதநோஷி பதார்ப்பணாநி |
ப்ராகேவ பத்மஜவலோந்மதநாதி லக்ஷ்ம்யஃ
ப்ராதுர்பவந்த்யவஹிதாஃ கலு தத்ரதத்ர ||

हे कल्याणि நன்மையைப் பயக்கவல்ல शैलतनया-कमन-अनुकम्पे! சிவனுடைய தயையே! त्वम् நீ यत्रयत्र எங்கெங்கே

पद-अर्पणानि वितनोषि அடிவைக்கிறாயோ तत्रतत्र அங்கங்கே पद्मज-वलोन्मथन-आदि-लक्ष्यः ப்ரம்மா, இந்த்ரன் முதலியோரின் பதவிச்செல்வங்கள் प्राग् एव முற்கூடியே अवहिताः கவனத்துடன் प्रादुर्भवन्ति खलु தோன்றி நிற்கின்றன அல்லவா!

சிவனுடைய தயையைக் குறிக்கும்போது சிவனுடைய தேவி பார்வதியைக் குறிப்பதினால், பார்வதியைப்போல் தயையும் சிவனுடைய மற்றோர் தேவியும் சக்தியுமாகும் என்றும், சிவனுடைய அருளை பக்தர் வேண்டும்போது கஷ்டப்படும் குழந்தையைக்கண்டு மனமிரங்கி, 'சீக்கிரம் அருள் செய்யும்' என்று பக்கத்தில் இருக்கும் அன்னையான அம்பிகை பிதாவிடம் தூண்டுதல் செய்யும் விசேஷமும் த்வனிக்கின்றன. முதல் ச்லோகத்திலும் இந்த இரண்டாவது ச்லோகத்திலும் ப்ரம்மேந்த்ராதிகள் அடிமையாவர், அவர்களின் பதவிகள் காத்திருக்கும் என்பதால், சிவதயை ஏற்பட்டவருக்கு ப்ரம்மேந்த்ராதி பதவிகளும் லக்ஷ்யமில்லை, அதற்கும் மேலான சிவமான, சாச்வதமான பதமே லக்ஷ்யம், அது கிட்டும் என்பது சொல்லப்படுகிறது.

2. O auspicious Compassion of Siva! Where you lay your steps, there the fortunes of Brahma, Indra and others, in all attention, present themselves in advance.

मन्दस्मितं मदनसुन्दरमिन्दुरेखा-
संनद्धशेखरमुमासखमुद्वहन्ती ।
दिव्यं वपुः किमपि दृक्पथगानघानां
मातर्मुदं हि तनुषे महती दये त्वम् ॥ २ ॥

மந்தஸ்மிதம் மதநஸுந்தரமிந்துரேகா-
ஸந்நத்தஶேகரமுமாஸகமுத்வஹந்தீ |
திவ்யம் வபு: கிமபி த்ருக்பதமாகதாநாம்
மாதர்முதம் ஹி தநுஷே மஹதீம் தயே த்வம் ||

हे मातः दये ! ஏ அன்னை தயையே! मन्द-स्मितम् புன்முறுவல் பூத்ததும் मदन-सुन्दरम् மன்மதனைப்போல அழகானதும் इन्दु-रेखा-संनद्ध-शेखरम् சந்திரகலைகட்டிய முடியணியோடு கூடியதும் उमा-सखम् பார்வதியோடு கூடியதுமான किमपि ஆச்சரியமானதொரு दिव्यं वपुः தேவ உருவை उद्वहन्ती தாங்கினவளாய் दृक्-पथ-गा கண்வழியை யடைந்து अनघा-नाम् தீங்கற்றவரின் महतीं பெரிய मुदम् ஆனந்தத்தை त्वं நீ तनुषे हि பெருக்கச் செய்கிறாயன்றோ!

சிவனை நாம் காண அவரே அருள் செய்தால் ஒழிய வழிவேறில்லை. நம் கண் முன் முதலில் அவர் அருள் செய்ததும் இருளில் வெளிச்சம் அடித்தாற்போல் அவருடைய தயாப்ரகாசம் ஏற்படுகிறது. அந்தத் தயா வெளிச்சத்தோடு நோக்குங்கால் அவ்வெளிச்சத்தில் ஒரே அன்பும் இன்பமும் அருளுமானதோர் ஆச்சரியமான, சொல்ல முடியாத, அப்ராக்ருதஸௌந்தர்யரூபமொன்று நம் பார்வைக்குப் புலனாகிறது. அதே பேருக்குத் தகுந்த சிவஸ்வரூபம். இத் தோற்றம் ஸாக்ஷாத்காரமானதும் துக்காவரணங்கள் விழுந்து, பெரிய ஆனந்தம் பரவுகிறது.

3. O Mother Compassion! Bearing a wonderful divine Form, with a gentle smile, beautiful like that of the god of Love, crest fastened

with a lunar digit and accompanied by Parvati, you come within sight of the spotless and extend to them great joy.

दिव्यं वपुस्तदनुसंदधतः पुरारेः
काँश्चिद्गुणाञ्जगति केचन निर्विशन्ति ।
आख्यामृतोर्मिरसिकास्त्वपरेऽभिनन्द-
न्त्यस्ताधयः शिवदयेऽम्ब तवावलम्बात् ॥ ४ ॥

திவ்யம் வபுஸ்ததநுஸந்தயத: புராரே:
காம்ஶ்சித் குணாஞ் ஜகதி கேசந நிர்விஶந்தி |
ஆக்யாம்ருதோர்மிரஸிகாஸ்த்வபரேऽபிநந்த-
ந்த்யஸ்தாதய: ஶிவதயேऽம்ப தவாவலம்பாத் ||

हे अम्ब शिवदये தாயே, சிவனுடைய கருணையே! **पुरारेः** சிவனுடைய **तत्** அந்த **दिव्यं वपुः** திவ்யமான ரூபத்தை **अनुसंदधतः** த்யானஞ் செய்கிற **केचन** சிலர் **जगति** உலகில் **काँश्चिद् गुणान्** சில நன்மைகளையே **निर्विशन्ति** அனுபவிக்கிறார்கள்; **तव अवलम्बात्** உன்னைக் கடைப்பிடித்ததால் **अपरे तु** வேறு சிலரோ **आख्या-अमृत-ऊर्मि-रसिकाः** நாமாம்ருத அலைகளில் களிப்பவராய் **अस्त-आधयः** இன்னல்களை (எல்லாம்) உதறி எறிந்து **अभिनन्दन्ति** (எவ்விதத்திலும்) ஆநந்தப்படுகின்றனர்.

இந்தப் பகவத்ரூபத்தை ஸாக்ஷாத்கரிக்க உபாயமான பகவத் அநுக்ரஹத்தை எப்படி அடைகிறது என்றால் அதற்கு நிச்சயமான வழி சிவனுடைய நாமாவை உச்சரிப்பதே. பரமோபாயமான சிவநாமத்தின் மேன்மை இந்த ச்லோகத்தில் வற்புறுத்தப்படுகிறது. இதே கவியின் ஆர்யாஷஷ்டியைப் பார்க்கவும்.

4. Some who contemplate that divine form of Siva enjoy some good things in this world ; others, O Mother, Compassion of Siva, thanks to your support, delight in enjoying the ambrosial billows of Siva's Name and casting away all anguish.

आखण्डलोऽयमिति कश्चिदखण्डितश्री-
र्वित्तेश्वरोऽयमिति विश्रुतवैभवोऽन्यः ।
धातेति कोऽपि जगतां जनकस्त्वामी
कल्याण्युमेशकरुणे परिणामभेदाः ॥ ५ ॥

ஆக²ண்ட³லோऽயமிதி கஶ்சித³க²ண்டி³தஶ்ரீ:
வித்தேஶ்வரோऽயமிதி விஶ்ருதவை- [ப⁴வோऽந்ய:
தா⁴தேதி கோऽபி ஜக³தாம் ஜநகஸ்தவாமீ
கல்யாண்யுமேஶகருணே பரிணாமபே⁴தா³: ॥

अयम् இந்த **आखण्डल इति** இந்திரன் என்ற **अखण्डित-श्रीः** குறைவற்ற செல்வமுடைய **कश्चित्** ஒருவன்; **अयम्** இந்த **वित्त-ईश्वर इति** குபேரன் என்ற **विश्रुत-वैभवः** புகழ் பெற்ற பெருமையையுடைய **अन्यः** மற்றொருவன்; **धाता इति** ப்ரம்மன் என்று **जगतां जनकः** உலகிற்கெல்லாம் தந்தையான **कोऽपि** ஒருவன்; **अमी** இவர்கள் **हे कल्याणि उमेश-करुणे** மங்களகரமான சிவதயையே! **तव** உன்னுடைய **परिणाम-भेदाः** வெவ்வேறு மாறுதல்களே.

பெரும் பதவிகள் என்று சொல்லக் கூடியவற்றின் எல்லை குபேரன், இந்த்ரன், ப்ரம்மா என்ற தேவதா

ஸ்தானங்கள்; இவை யெல்லாம் சிவனின் தயை ஏற்பட்டால் தாமாய் வந்து சேரும்.

5. This somebody with unimpaired fortune called Indra, this another well known for his greatness as the lord of riches, and some one called Brahma, the creator of the worlds, these, O auspicious Compassion of Siva, are (but) various transformations of your own self.

ईशो हरः स जगतां ननु तस्य च त्व-
मीशा परार्तिविनिराकृतिराकृतिस्ते ।
तन्मामकार्तिहरणं करुणे न चेत्त्वं
धत्से कथं कथय देवि तवात्मलाभः ॥ ६ ॥

ஈசோ ஹர: ஸ ஜகதாம் நநு தஸ்ய ச த்வ-
மீசா பரார்த்திவிநிராக்ருதிராக்ருதிஸ்தே |
தந்மாமகார்த்திஹரணம் கருணே ந சேத்த்வம்
தத்ஸே கதம் கதய தேவி தவாத்மலாப: ||

स ईशः அந்த ஈசுவரன் (சிவன்) जगतां हरः உலகங்கள் எல்லாவற்றையும் அழிக்கிறவர்; त्वं च நீயும் तस्य அவருடைய ईशा ननु ஈச்வரியல்லவா? ते உன்னுடைய आकृतिः உருவமே पर-आर्ति-विनिराकृतिः பிறருடைய துன்பங்களைப் போக்கடிப்பது. तत् ஆகையால் हे देवि करुणे ஏ தயா தேவியே! मामक-आर्ति-हरणम् என் துன்பங்களைப் போக்குவதை त्वं நீ न धत्से चेत् ஏற்றுக்கொள்ளாவிட்டால் कथम् எப்படி तव உனக்கு आत्मलाभः உன் ஸ்வரூபமே ஸித்திக்கும்? சொல்லு.

தயை என்றால் என்ன? குற்றத்தைப் பொறுப்பது, துன்பத்தைப் போக்குவது என்பதல்லவா அதன் ஸ்வரூபம்; அப்படியிருக்க ஒருவருடைய துன்பத்தை நீக்குவதென்ற காரியத்தை அந்தத் தயை ஏற்காவிட்டால், தயை என்ற தன்மைதான் எப்படி நிலைக்கும்?

6, That Iswara is the destroyer of the worlds and are you not His Isvari? And your very form is the repudiation of the distress of others. O Goddess Compassion! if you do not remove my distress, tell me, how are you to justify yourself?

दाक्षायणीसहचरे गरलग्रहेण
दत्ताभये विरचितेऽम्ब दये भवत्या ।
अश्वद्विपाप्तिरमरेशितुरच्युतस्य
श्रीकान्तता दिविषदाममृताशिता च ॥ ७ ॥

தாக்ஷாயணீஸஹசரே கரளக்ரஹேண
தத்தாபயே விரசிதேऽம்ப தயே பவத்யா ।
அச்வத்விபாப்திரமரேசிதுரச்யுதஸ்ய
ஸ்ரீகாந்ததா திவிஷதாமம்ருதாசிதா ச ॥

हे अम्ब दये ஏ தாயே தயையே! **भवत्या** உன்னால் **दाक्षायणी-सहचरे** சிவன் **गरल-ग्रहेण** விஷத்தைத்தான் எடுத்துக்கொண்டு **दत्त-अभये** (உலகிற்கெல்லாம்) அபயத்தைக் கொடுத்தவராய் **विरचिते** (सति) செய்யப்பட்டதும் **अमर-ईशितुः** தேவேந்திரனுக்கு **अश्व-द्विप-आप्तिः** குதிரையும் (உச்சைச்ரவஸ்ஸும்) யானையும் (ஐராவதமும்) கிடைத்தது; **अच्युतस्य** விஷ்ணுவுக்கு **श्री-कान्तता** லக்ஷ்மியின்

கணவன் என்பது ஏற்பட்டது; विविषदाम् தேவர்களுக்கு अमृत-आशिता च அமிர்த உணவும் ஏற்பட்டது.

அன்று அமிர்தமதனத்தில் கடலிலிருந்து காலகூட விஷம் ஏற்பட்டபோது, சிவபெருமானுக்குத் தயை ஏற்பட்டிருக்காவிட்டால், இந்திரனுக்கு வாஹனம் ஏது? திருமாலுக்கு மனைவி ஏது, தேவர்களுக்கும் உணவுதான் ஏது? ப்ரபஞ்சமே விஷத்தால் நசித்துப் போயிருக்கும். தயையின் தன்மை யாதெனில் தீங்கைத் தான் ஏற்றுக் கொண்டு பிறருக்கு நன்மை பயப்பதே.

7. O Mother Compassion! When you made Siva offer security (to the Universe) by (Himself) taking the poison, the lord of the gods got (his) horse and elephant (Uccaisravas and Airavata), Vishnu got Lakshmi as his beloved and the gods got the ambrosia for their food.

क्रूरेण हन्त गरलेन गलेऽनलेन
फाले शिरस्यपि तरङ्गवतीझरेण ।
क्रान्तं त्वदध्वगतमातनुषे दये स्वा-
धीनेश्वरा भवसि कः किमिहाभिधत्ताम् ॥ ८ ॥

க்ரூரேண ஹந்த கரளேந களேऽநலேந
பாலே ஶிரஸ்யபி தரங்கவதீஜ்ஜரேண ।
க்ராந்தம் த்வதத்வகதமாதநுஷே தயே ஸ்வா-
தீநேஶ்வரா பவஸி க: கிமிஹாபிதத்தாம் ॥

हे दये ஏ சிவதயையே! त्वद्-अध्व-गतम् உன் வழிவந்த
...வின் गले கழுத்தில் क्रूरेण கொடுமையான गरलेन விஷத்தி

ஹும் फाले நெற்றியில் अनलेन நெருப்பினாலும் शिरसि தலையில் तरङ्गवती-भरेण अपि ஆற்றின் வெள்ளத்தாலும் क्रान्तम् ஆக்ரமிக்கப்பட்டவனாய் आतनुषे செய்கிறாய். हन्त அந்தோ! स्वाधीन-ईश्वरा சிவனைத் தன் வசமாகக் கொண்டவளாய் भवसि இருக்கிறாய்! इह இவ்விஷயத்தில் कः எவன் किम् எதை अभिधत्ताम् சொல்லட்டும்.

'ஒருவர் தன்னிடம் அண்டிய மற்றவருக்கு உபகாரம் செய்வதானால் நன்மை பயக்கும் பொருள்களை வழங்குவார். நீயோ உன்னை அண்டிய பக்தனுக்கு வழங்கும் பொருள்கள்தாம் என்ன? விஷம், நெருப்பு, தலையின்மேல் 'ஜில்' லென்ற தண்ணீர்! நன்றாயிருக்கிறது! இப்படிப்பட்ட கடுமையான அநுக்ரஹவிளையாட்டெல்லாம் ஸ்வேச்சையாய் நடந்துகொள்ளும் ப்ரபுக்களுக்கு லக்ஷணம்போலும்!' என்று நிந்தாஸ்துதி. விஷம் விழுங்குதல், நெருப்பு ஏந்தல், நதி தாங்குதல் எல்லாம் சிவனுடைய உருவத்தின் லக்ஷணங்கள்; அவற்றைச் சிவதயை அளிக்கிறாள் என்றதால், தன்வழி வந்தவருக்கெல்லாம் சிவஸாரூப்யத்தை அருளுகிறாள் என்று பொருள்.

இந்த ஶ்லோகத்தில் த்வனிக்கும் மற்றொரு ஸ்வாரஸ்யம்: சிவரூபத்தின் இன்றியமையாத லக்ஷணங்களாய் எடுத்துச் சொல்லப்பட்ட விஷம் விழுங்குதலையும் கங்கையைத் தலைமேல் தாங்குதலையும் கவனித்தால், அவ்விரு அத்புத சிவலீலா நிகழ்ச்சிகளில் உலகை உய்விக்க சிவன் தான் ஏற்றுக்கொண்ட கஷ்டமும் பாரமும் விளங்கும்; அப்பெரும் காரியங்களின் மூலம் சிவபிரானுக்கு உலகின் மேலுள்ள தயை வெளியாகிறது; அதுபோலத் தீங்கைத் தான் ஏற்று உலகைக் காப்பதென்பது தயையின் தன்மை.

8. O Mother Compassion! Alas, you make one coming your way overcome by poison in his neck, by fire on his forehead, and by the flood of the river (the Ganges) on his head! Lord Siva is at your beck and call! Who can say and what in this matter?

काचित्त्वदीयकणिका मणिकाञ्चनाद्यै-
रर्थैर्धिनोत्यमुमिहारुचिहेतुरन्या ।
उल्लासयत्युडुपतिश्रितमौलिसीम्नि
त्वद्धाम्नि ते हि करुणे सरणिर्विचित्रा ॥ ९ ॥

காசித்த்வதீயகணிகா மணிகாஞ்சநாத்யை-
ரர்தைர்திநோத்யமுமிஹாருசிஹேதுரந்யா ।
உல்லாஸயத்யுடுபதிச்ரிதமௌலிஸீம்நி
த்வத்தாம்நி தே ஹி கருணே ஸரணிர்விசித்ரா ॥

हे करुणे ஏ தயையே! **काचित् त्वदीय-कणिका** உன் திவிலை களில் ஒன்று **अमुम्** இந்தப் பக்தனை **मणि-काञ्चन-आद्यैः** ரத்னம், பொன் முதலிய **अर्थैः** பொருள்களால் **धिनोति** திருப்திசெய்து வைக்கிறது; **अन्या** மற்றொரு திவிலையோ **इह** இந்த மணி காஞ்சனங்களில் **अरुचि-हेतुः** ருசியில்லாமையை ஏற்படுத்தி **त्वद्-धाम्नि** உன் இருப்பிடமான **उडुपति-श्रित-मौलि-सीम्नि** சிவனிடத்தில் (**अमुम्** இந்தப் பக்தனை) **उल्लासयति** விளையாடும்படி செய்கிறது. **ते** உன்னுடைய **सरणिः** வழி **विचित्रा** விசித்ரமானது!

இவ்வுலகின் நன்மைக்கும், பரமபுருஷார்த்தமான சிவ ஸாயுஜ்யத்திற்கும் இந்தச் சிவதயையொன்றே காரணம். நமக்கு ஏற்படும் செல்வத்தைக் கொடுத்ததும் அச்சிவ

தயையே; பின் அந்தத் தனபோகத்தில் விரக்தியைக் கொடுத்து, மனத்தை ஈச்வர பரமாய்ச் செய்து, ஈச்வர னிடமே ரமித்திருக்கச் செய்வதும் அச்சிவ தயையே.

9. O Compassion! One drop of yours gratifies this devotee (of yours) with riches of gem and gold; and another, causing aversion (to these riches), makes him sport in your own region, namely Siva. Your way is indeed wonderful!

भीषामहद्भयगिरोऽतिभयंकरत्वं
यस्याहुरुग्र इति भीम इति प्रथा च ।
क्षिप्त्वेव दासयसि देवि दये तमेनं
हा जिह्वयैतदभिधास्पृशि पुल्कसेऽपि ॥ १० ॥

பீஷாமஹத்பயகிரோऽதிபயங்கரத்வம்
யஸ்யாஹுருக்ர இதி பீம இதி ப்ரதா ச |
க்ஷிப்த்வேவ தாஸயஸி தேவி தயே தமேநம்
ஹா ஜிஹ்வயைதத³பிதாஸ்ப்ருசி புல்கஸேऽபி ||

हे देवि दये! ஏ தயா தேவி! भीषा-महद्-भय-गिरः "भीषास्माद्वातः पवते", "महद् भयं वज्रम् उद्यतम्" என்ற மறைமொழிகள் यस्य எந்தப் பரமேச்வரனுடைய अति-भयङ्करत्वम् மிகவும் பயப்படும்படியான தன்மையை आहुः சொல்லுகின்றனவோ, यस्य எவருக்கு उग्रः கடுமையானவர் भीमः इति च பயங்கரமானவர் என்றும் प्रथा பெயரோ तम् एनम् அந்த இச்சிவனை जिह्वया தன் நாவினால் एतद्-अभिधा-स्पृशि இச்சிவனுடைய பெயரைத்தொடும் पुल्कसे अपि புலையனிடத்

ம் क्षिप्त्वा इव அடித்துத் தள்ளினாற்போல் दासयसि அடிமையாய்ச் செய்கிறாய். हा! ஆச்சர்யம்!

உபநிஷத்துக்கள் "भीषास्माद्वातः पवते" (தைத். 2·8) "இவரிடமுள்ள பயத்தால் காற்று அடிக்கிறது, சூரியன் உதயமாகிறான்" என்றவாறும் "महद्भयं वज्रमुद्यतम्" (கட. 6·2) வஜ்ரம்போல் மிகவும் பயப்படும்படியானது என்றவாறும், பரமேச்வரனுடைய ஜகந் நியாமகமான பரத்வத்தைக் கூறுகின்றன; அவருடைய பெயர்களோ உக்ரன், பீமன் என்று கேட்ட மாத்திரத்திலேயே ஒருவன் நடுங்கும்படியானவை; இப்படிப்பட்ட கடுங்கடவுளொன்று கேவலம் மானிடனொருவனுக்கு உபகாரஞ் செய்ய வருமா என்றால், வந்தே தீரும்; அக்கடவுளின் பரத்வம் எவ்வளவோ அதில் பதின்மடங்கு அவருடைய ஸௌலப்யம்; அவரைப் பெயரைச் சொல்லி அழைத்தால் போதும்; 'சொல்லுபவன் மிகவும் ஈனனாயிருந்தபோதிலும், அவனுக்கு அருள்வார்; ஏனெனில், அவருக்குள்ள தயை அவ்வளவு. இந்தத் தயையை எழுப்ப அவருடைய நாமோச்சாரணமே பரமோபாயம் என்று முன் வியாக்யானஞ்செய்த ஆக்யா ஷஷ்டி என்றதிலிருந்து விளங்கும்.

10. O Goddess Compassion! That Lord whose exceeding fearfulness the Vedic utterances like 'Bisha', 'Mahat-Bhaya' speak of, who is well known as (Ugra) the Severe and (Bhima) the Terrible, Him you verily hurl down and, ah, make the slave of even that lowliest born who but touches His Name with his tongue.

नान्यो मदस्त्यगतिकोऽगतिकस्तव स्वं
शंभोर्दयेऽघपिशुना मयि शश्वदास्ते ।
सर्वज्ञता विदधती तव दुर्लभं मां
सज्जस्व मा जननि भूरपदे तु निःस्वा ॥ ११ ॥

நான்யோ மதஸ்த்யகதிகோ'஽கதிகஸ்தவ ஸ்வம்
ஶம்போர்தயே'஽கபிஶுநா மயி ஶஶ்வதாஸ்தே ।
ஸர்வஜ்ஞதா விதததீ தவ துர்லபம் மாம்
ஸஜ்ஜஸ்வ மா ஜநநி பூரபதே து நிஃஸ்வா ॥

हे दये! ஏ தயையே! मत् என்னைவிட अगतिकः கதியற்ற अन्यः வேறொருவன் न अस्ति இல்லை ; तव உனக்கு अगतिकः கதியற்றவன் स्वम् சொத்து ; सर्वज्ञता எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும் ஆற்றல் என்பது शश्वत् எப்பொழுதும் मयि என் விஷயத்தில் शंभोः சிவனிடத்தில் अघ-पिशुना என் பாபங்களைக் கோள்சொல்லிக் கொடுப்பதாய் तव உனக்கு माम् என்னை दुर्लभम् அடைய முடியாதவனாய் विदधती आस्ते செய்துகொண்டிருக்கிறது ; जननि! தாயே! सज्जस्व ஸந்நத்தமாயிரு ; अपदे तु காரணமின்றியே निःस्वा சொத்தற்றவளாய் मा भूः ஆகிவிடாதே.

பரமசிவனுக்குத் தயை என்று ஏற்பட்டிருக்கும் தேவியிடம் பொறாமை கொண்டவள் அவளுக்குச் சக்களத்தியாய் வாய்த்திருக்கும் 'ஸர்வக்ஞதை' என்றவள். வழியில்லாதவர்களையெல்லாம் தான் காப்பாற்ற வேண்டுமென்று தயாதேவி தன் சொத்தாகச் சேர்த்துக்கொள்ளுகிறாள் ; ஆனால் 'ஸர்வக்ஞதை'யோ சிவனிடம் மெள்ளச் சென்று அவர் காதடியில் "தயை அவனை ஏற்றுக்கொண்

டிருக்கிறாள், பாரும், அவன் இந்த மஹாபாதகங்களைச் செய்தவன்" என்று காட்டிக்கொடுத்து, சிவன் காப்பாற்றாமல் அவனைக் கை விடும்படி செய்ய முயலுகிறாள். 'ஸர்வக்ஞதை' வலுத்தால், 'தயை'க்குக் காக்க ஆள் இல்லாமற் போகும்; ஆகையால் கவி தயா என்ற மாதாவை 'ஜாக்ரதை! உனக்கு ஒருவருமில்லாமல் பண்ணிவிடவேண்டும் என்று ஸர்வக்ஞதையின் முயற்சி; இடம் கொடுக்காதே' என்று சொல்லுகிறார். தாத்பர்யமென்னவெனில், ஒருவன் செய்த பிழையைத் தெரிந்துகொண்டு பாராட்டினால் அவனிடம் அன்போ அருளோ காட்ட முடியாது; தோஷ ஞானமும் தயையும் ஒன்றுக்கொன்று ஆகாதவை; தோஷங்களை க்ஷமித்து எழுந்து காப்பதே தயையின் லக்ஷணம். நல்லோரை அவர் செய்த நன்மைகளே காக்கும்; பாபிகளையோ தயையே காக்கவேண்டும்.

11. O Compassion of Siva ! There is none more helpless than myself; and the helpless one is your wealth; (but) there is always (this) omniscience of Siva, bearing Him tales about my sins and rendering me difficult of access to you; be careful; O Mother, don't you, for no reason, become bereft of your wealth.

स्वाधीनितेन्दुमकुटासि समर्थितोप-
मन्युप्रभृत्यभिमता जगति श्रुतासि ।
आयुष्मती जननि मन्तुभिरेव चासि
हा हन्त मां न करुणे कथमभ्युपैषि ॥ १२ ॥

ஸ்வாதீநிதேந்துமகுடாஸி ஸமர்த்திதோப-
மந்யுப்ரப்ருத்யபிமதா ஜகதி ஶ்ருதாஸி |
ஆயுஷ்மதீ ஜநநி மந்துபிரேவ சாஸி
ஹா ஹந்த மாம் ந கருணே கதமப்யுபைஷி ||

हे जननि करुणे அன்னை தயையே ! **स्वाधीनित-इन्दुमुकुटा असि** சிவனைத் தன் வசப்படுத்திக் கொண்டவளாயிருக்கிறாய்; **समर्थित-उपमन्यु-प्रभृति-अभिमता** உபமந்யு முதலியவரின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுத்தவளாயும் **जगति** உலகில் **श्रुता असि** ப்ரஸித்திபெற்றிருக்கிறாய்; **मन्तुभिः एव** (என் போன்றவரின்) பாபங்களாலேயே **आयुष्मती च असि** உயிர் தரிப்பவளாயும் இருக்கிறாய்; **हा हन्त** அந்தோ! **कथम्** எப்படி **मां न अभ्युपैषि** என்னிடம் வராமலிருக்கிறாய் ?

முன் ச்லோகத்தில் பக்தனின் பாபங்களைத் தயை என்ற மாதா பொறுத்து மன்னித்து விடுகிறாள் என்ற தாத்பர்யம் விவரிக்கப்பட்டது. தயை என்ற தேவிக்கு க்ஷமை என்றது சேடி போன்றது. ப்ரபு பிழைகளைப் பொறுத்து, மன்னிக்காவிட்டால், நாம் பிழைக்க வழியே கிடையாது. ப்ரபுவின் தயை நம் குற்றங்களை அவச்யம் மன்னித்துத் தன்னையும் நமக்குத் தந்தருளும். இப்படித் தயை தன்னைத்தான் வளர்த்துக்கொள்வதற்குப் பக்தரின் பாபங்கள் இல்லாமற்போனால், தயை எதை மன்னிப்பது, எப்படித்தான் தன் தன்மையையும் ஸமர்த்தித்துக் கொள்வது? ஆகையினாலே கவி இங்கு தயைக்கு உயிரைக்கொடுத்து வளர்ப்பது பக்தரின் பாபங்களே என்கிறார். தயைக்குத் தான் உண்டு ஜீர்ணிக்கும் உணவு பாபமே.

இவ்வர்த்தங்களை ஸ்ரீ பராசரபட்டர் தம் "க்ஷமா ஷோடசி" என்ற ஸ்தோத்திரத்தில் நன்றாய் விளக்கியிருக்கிறார். ஸ்ரீ அய்யாவாள் 'ஸ்வாதீனிதேசந்து முகுடாவலி' என்றதால் சிவனைத் தன்னிஷ்டப்படியோ, கர்மமென்கிற சட்டப்படியோ நடக்கவிடாமல் தயை அவரையும் தன் வசமாக்கிக்கொண்டு, தன்னிஷ்டப்படி நடத்துகிறாள் என்றார்; இதே பாவத்தை ஸ்ரீ பட்டரும் க்ஷமா ஷோடசியின் முதல் ச்லோகத்தில், "ஈசுவரனின் ஸ்வாதந்த்ர்யத்தையே தள்ளிவைத்துவிட்டுத் தானே உலகின் க்ஷேமத்தை ஏற்படுத்துகிறாள்" என்கிறார். அதே இடத்தில் நாம் மேலே சொன்னதுபோல் தயை என்ற தேவிக்கு 'க்ஷமை' ஒரு தோழி என்று பட்டர் வர்ணிக்கிறார். "க்ஷாந்தி ஸ்தோஸ கருணா ஸகீ" என்று. மூன்றாவது ச்லோகத்தில், "பகவானின் க்ஷமைக்குள்ள பசிக்கு இவ்வுலகிலுள்ள உயிர்ப்பிராணிகள் எல்லாவற்றினுடைய பாபங்களையும் ஆஹாரமாய்க் கொடுத்தாலும் போதாது, ஆனாலும் வருந்தை விடவேண்டாம், ஏதோ கொஞ்சம், இதோ என் பாபங்கள் இருக்கின்றன, இதைக்கொண்டு க்ஷமை சிற்றுண்டியாவது செய்யட்டும், பட்டினிகிடந்து ஓடிப் போகவேண்டாம்" என்று சொல்லுகிறார்.

12. You are renowned in the world as one who has made Siva obedient to you and one who fulfilled the desires of Upamanyu and others; O Mother Compassion! Only by (our) sins do you live; alas! how is it that you do not come to me?

शंभो त्वमेव शरणं मम चन्द्रचूडे-
त्याद्या गिरस्तदुचितस्थितिहानितो नः ।
सत्येतरा अपि विभुर्भजनाय यद्य-
द्गृह्णाति तद्धि करुणे चरितं भवत्याः ॥ १३ ॥

ஶம்போ த்வமேவ ஶரணம் மம சந்த்ரசூடே-
த்யாத்³யா கி³ரஸ்தது³சிதஸ்தி²திஹாநிதோ ந꞉ |
ஸத்யேதரா அபி விபு⁴ர்ப⁴ஜநாய யத்³யத்³-
க்³ருஹ்ணாதி தத்³தி⁴ கருணே சரிதம் ப⁴வத்யா꞉ ||

'शंभो चन्द्रचूड! ஏ சம்போ, ஏ சந்த்ரசூட! मम எனக்கு त्वम् एव நீயே शरणम् சரணம்' इत्याद्याः என்ற இது முதலான गिरः வார்த்தைகள் तद्-उचित-स्थिति-हानितः' அவற்றிற்குத் தகுதியான இருப்பிடமல்லாததால் नः எங்களுக்கு सत्य-इतरा अपि (அவை) உண்மையில்லாதவையாக இருப்பினும் भजनाय அதுவும் தன்னைப் பஜிப்பதே என்று विभुः பகவான், यद् यद् எது गृह्णाति ஏற்றுக் கொள்ளுகிறாரோ तत् அது हे करुणे ஏ தயையே भवत्याः உன்னுடைய चरितं हि நடத்தையன்றோ!

நாம பஜனத்தில் போலியும் பலித்துவிடும் என்ற விஷயம் ஆக்யாஷஷ்டியில் பாகவதாதி புராணங்களின் மேற்கோள்களோடு விவரிக்கப்பட்டது; அங்கேபார்க்கவும்.

13. "O Siva! Moon-crested Lord! You alone are my refuge." If expressions like these, though false on account of their not being proper in form, the Lord accepts as devotion, it is (all) your doing, O Compassion!

यदेशः कुप्येन्मे दुरितविसरैर्दैन्यधुरया
तदा मे हूताविर्भवतु भवती तस्य च पुरः ।
मदीयांहःसंहत्यपलपनरंहः प्रथयति
त्वदाविर्भावेऽसावलमिह दये किं कलयितुम् ॥ १४ ॥

யதேசः குப்யேந் மே துரிதவிஸரைர்தைந்யதுரயா
ததா மே ஹூதாவிர்பவது பவதீ தஸ்ய ச புரः।
மதீயாம்ஹःஸம்ஹத்யபலபநரம்ஹः ப்ரதயதி
த்வதாவிர்பாவேऽஸாவலமிஹ தயே
[கிம் கலயிதும் ॥

यदा எப்பொழுது **ईशः** கடவுள் **मे** என்னுடைய **दुरित-विसरैः** பாபப்பெருக்கால் **कुप्येत्** கோபிப்பாரோ, **तदा** அப்போது **दैन्य-धुरया** மிகவும் கதியற்ற நிலைமையால் **हूता** (என்றால்) கூப்பிடப்பட்ட **भवती** நீ **मे** என்னுடைய **पुरः** எதிரிலும் **तस्य च** அக்கடவுளுடைய **पुरः** எதிரிலும் **आविर्भवतु** வந்து நிற்பாயாக; **हे दये** ஏ தயையே! **त्वत्-आविर्भावे** உன் வரவு **मदीय-अंहः-संहति-अपलपन-रंहः** என்னுடைய பாபக்குவியலை மறுப்பதின் வேகத்தை **प्रथयति (सति)** காண்பிக்கும்போது **इह** என்னைச் சீர்தூக்கும் இவ்விஷயத்தில் **असौ** இந்தக்கடவுள் **किम्** என்ன **कलयितुम्** செய்ய **अलम्** ஸமர்த்தர்?

கடவுள் அவனவனுடைய கர்மப்பேரேட்டைப் புரட்டி நல்லது கெட்டதான வரவு செலவுகளைக் கூட்டிக் கழித்து, ரக்ஷித்தோ, சிக்ஷித்தோ தன் ஈச்வரத் தொழிலை நடத்தப் பார்க்கிறார். அந்தச் சட்டப்படி பக்தனைக் கூவி, அவன் செய்த பாபங்களைக் கண்டு கடியும் தருணம், தயை என்ற அன்னை திடீரெனத்தோன்றி, பாபங்கள் முழுவதையும்

'இவன் செய்யவில்லையே' என்று மூடிமெழுகி, கோபிக்கும் பிதாவிற்கு எதிரே குழந்தைக்காகப் பரிந்து சொல்லும் தாயைப் போல், தன் பரபரப்பைக் காட்டுகிறாள். தயை பாபங்களை மறைத்துவிட, ஈச்வரனுக்கு ஒன்றும் செய்ய இயலுவதில்லை.

14. When the Lord is angry with me for my vast sins, and I call you out in extreme helplessness, may you present yourself before me and the Lord ; and when, O Compassion, your emergence displays the speedy repudiation of all my sins, what can He do?

महेशे संक्रुद्धे मदघविदि मह्यं श्रितजन-
श्रमाक्षान्त्री देवि त्वमयि सहसाविर्भव दये ।
मदीयांहःसंहत्यपलपनरंहः प्रथयति
त्वदाविर्भावेऽसावलमिह दये किं कलयितुम् ॥ १५ ॥

மஹேசே ஸம்க்ருத்தே மதகவிதி மஹ்யம் ச்ரிதஜந-
ச்ரமாக்ஷாந்த்ரீ தேவி த்வமயி ஸஹஸாவிர்பவ
[தயே ।
மதீயாம்ஹஸ்ஸம்ஹத்யபலபநரம்ஹஃ ப்ரதயதி
த்வதாவிர்பாவேऽஸாவலமிஹ தயே
[கிம் கலயிதும் ॥

मद्-अघ-विदि என் பாபங்களை உணர்ந்த महेशे பரமேச்வரன் मह्यम् என்னைக் குறித்து संक्रुद्धे (सति) கோபிக்கும்போது, अयि देवि दये ஏ தயாதேவியே! श्रित-जन-श्रम-अक्षान्त्री ஆச்ரயித்த ஜனங்களின் கஷ்டத்தைப் பொறுக்க

மாட்டாத त्वम् நீ सहसा திடீரென்று आविर्भव முன் தோன்றிவா, मदीय-अंहः-संहति-अपलपन-रंहः என் பாபக்குவியலை மறைப்பதின் வேகத்தை त्वद्-आविर्भावे உன் தோற்றமானது प्रथयति सति காண்பிக்கும்போது इह இவ்விஷயத்தில் असौ இக்கடவுள் किं कलयितुम् अलम् என்ன செய்ய முடியும்?

15. When **Lord** Siva, knowing my sin, is angry with me, O Goddess Compassion, manifest yourself immediately, you who cannot bear the distress of your refugees. When your appearance displays the vehement negation of all my sins, what can He do?

त्वया भाव्यं मातर्मयि शशिकलोत्तंसकरुणे
प्रणम्य त्वां याचे कति कति भवत्या न हि भृताः ।
जगत्येको वर्ते क्वचिदपि गतिं कांचिदपि न-
न्वपश्यन्नैवेदं सदृशमगतीनां तव गतेः ॥ १६ ॥

த்வயா ஹாவ்யம் மாதர்மயி ஶஶிகலோத்தம்ஸகருணே
ப்ரணம்ய த்வாம் யாசே கதி கதி ஹவத்யா ந
ஹி ஹ்ருதா: ।
ஜகத்யேகோ வர்த்தே க்வசிதபி கதிம் காஞ்சிதபி ந-
ந்வபஶ்யந்நைவேதம் ஸத்ருஶமகதீநாம்
[தவ கதே: ॥

मातः அன்னையே! शशिकलोत्तंस-करुणे ஏ சிவதயையே! मयि என்னிடத்தில் त्वया भाव्यम् நீ இருக்கவேண்டும்! प्रणम्य நமஸ்காரஞ்செய்து त्वाम् உன்னை याचे வேண்டிக்

கொள்ளுகிறேன்; **भवत्या** உன்னால் **कति कति हि** எவ்வளவு பெயர்கள்தான் **न भृताः** தாங்கப்படவில்லை; **जगति** உலகில் **क्वचिद् अपि** ஓரிடத்திலும் **कांचिद् अपि** ஒரு **गतिम्** போக்கையும் **अपश्यन्** காணாதவனாய் **एकः** ஒருவனாய் **वर्ते ननु** நான் இருக்கிறேன் அன்றோ; **अगतीनां गतेः** கதியற்றவருக்குக் கதியான **तव** உனக்கு **इदम्** இது **नैव सदृशम्** தகுதி அல்லவே அல்ல.

16. O Mother Compassion of Siva! You must be with me; I prostrate and beseech you; how many have you not supported? Alone in the world I am, not finding anywhere any refuge. This is not proper at all for you who are the refuge of the refugeless.

तवाध्वन्या धन्यास्तव हि भवनादन्तकरिपो-
र्यदेष्वेकेनैनं शिरसि धनुषा घातमदयम् ।
तथान्येन ग्रावणां किरणमपरेणासिलतया
दयेऽनैषीन्मूर्धप्रविदलनमप्यम्ब भवती ॥ १७ ॥

தவாத்⁴வந்யா த⁴ந்யாஸ்தவ ஹி ப⁴வநாத³ந்தகரிபோ-
ர்யதே³ஷ்வேகேநைநம் ஶிரஸி த⁴நுஷா
[கா⁴தமத³யம் ।
தயாந்யேந க்³ராவ்ணாம் கிரணமபரேணாஸிலதயா
த³யேऽநைஷீந்மூர்த⁴ப்ரவித³லநமப்யம்ப³ ப⁴வதீ ॥

हे अम्ब दये ஏ தாயே, தயையே! **तव** உன்னுடைய **अध्वन्याः** பக்தர்கள் **तव** உன்னுடைய **भवनात्** இருப்பிடமான **अन्तक-रिपोः** சிவனைவிட **धन्याः हि** அதிர்ஷ்டசாலிகள் அல்லவா! **यत्** ஏனெனில் **एषु** இந்த உன் பக்தரில்

एकेन ஒருவனால் भवती நீ अदयम् இரக்கமின்றி एनम् இந்தச் சிவனை शिरसि தலையில் धनुषा வில்லால் घातम् अनैषीत् அடிபட வைத்தாய்; तथा அதுபோல अन्येन மற்றொரு பக்தனால் ग्राव्णां किरणम् अनैषीत् கற்களை எறியும்படி செய்தாய்; अपरेण மற்றொருவனால் असिलतया வாளால் मूर्ध-प्रविदलनम् अपि अनैषीत् தலையை வெட்டும்படியும் செய்தாய்.

சிவதயை ஏற்பட்டவர்கள் சிவனையே தன் அதீனமாக்கி, தன்னிஷ்டப்படி சிவனை நடத்திக் கொள்ளலாம்; அவரும் பக்தவச்யராய் அவன் செய்வதை யெல்லாம் அன்பு விளையாட்டாய் அனுபவிக்கிறார். சிவனைத் தலையில் வில்லால் அர்ஜுனன் அடித்து விட்டான். கல்லால், சாக்ய நாயனார் அடித்தார். வாளால் அரிவாட்டாய நாயனார் வெட்டினார்.

17. O Mother Compassion! Those that have resorted to you are superior to that Siva who is your abode; for, of these you made one beat Siva mercilessly on the head, another pelt Him with stones and still another cut His head even with a sword!

प्रियोऽर्थोऽयं शंभोः प्रसदनविधेयाधिगम इ-
त्यथ द्वेष्योऽयं तत्प्रसदनविधेयक्षतिरिति ।
परोऽयं तंत्रायोदय इति च तद्धीकृदखिलं
न मे तद्धीर्मैवं मयि विमुखता ते शिवदये ॥ १८ ॥

ப்ரியோர்த்தோऽயம் ஶம்போ: ப்ரஸதநவிதேயாதிகம இ-
த்யத த்வேஷ்யோऽயம் தத்ப்ரஸதநவிதேயக்ஷதிரிதி ।
பரோऽயம் தந்த்ராயோதய இதி ச தத்தீக்ருதகிலம்
ந மே தத்தீர்மைவம் மயி விமுகதா தே ஶிவதயே ॥

हे शिव-दये! ஏ சிவனின் கருணையே! शंभोः சிவனு
டைய प्रसदन-विधेय-अधिगमः इति அருளுக்காகவேண்டிய
(பஜன பூஜனாதி) கர்மாக்களைச் சேகரித்துக்கொள்ளுவது
என்பது प्रियः अर्थः (சிவனுக்கு) ப்ரியமான விஷயம்;
अथ பின் तत्-प्रसदन-विधेय-क्षतिः इति अयम् அவருடைய
அருளுக்காகவேண்டிய கர்மாக்களைத்தொலைத்துக்கொள்வ
தென்ற இது द्वेष्यः (अर्थः) அவர் வெறுக்கத்தக்க விஷயம்;
तत्र இக்கர்மானுஷ்டானத்தில் आय-उदयः इति च अयम् பல
லாபம் ஏற்படுவது என்ற இதுவும் परः (अर्थः) அவருக்குப்
பொருட்டல்லாத (உதாஸீனமான) விஷயம்; अखिलम्
இவை எல்லாமே तद्-धी-कृत् அச்சிவ புக்தியினால் ஆக
வேண்டியவை; मे எனக்கோ तद्-धीः அச்சிவபுத்தி
ந இல்லை; एवम् இவ்வாறு ते உனக்கு मयि என்னிடத்
தில் विमुखता பராமுகம் मा வேண்டாம்

சிவப்ரஸாதம் ஏற்படவேண்டுமானால் அதற்கான
பக்தி முதலிய ஸத்கர்மாக்களை செய்யவேண்டும்; அப்ப
டிப்பட்ட கர்மாக்களை செய்யாமலிருப்பது சிவனுக்குப்
பிடிக்காது. ஆனாலும் இதிலிருந்து இந்த பலன் வரும்
என்ற புத்தியோடு அக்கர்மாவை செய்யாமல சிவார்ப்பணம்
என்று செய்ய வேண்டும்; அப்படிச் சிவார்ப்பணமாய்ச்
சிவமயமாய்ப் புத்தியுள்ளவனுக்கே செயய முடியும்;
எனக்கு அச்சிவபுத்தி கிடையாது என்ற காரணத்தால்
என்னை புறக்கணிக்கக்கூடாது.

18. The acquisition of the acts to be done for propitiating Siva is a thing dear to Siva; the absence of these is a thing disliked by Him; and

the outcome of a gain in such things is a matter of indifference to Him; all these are to be done, having Him as the object of our thought; such thought is not in me; but you should not (on that score) turn away from me.

क्षिपन्कामिन्यादिष्वनवधि मिथोवैशसधुरा-
दुरापेष्वेष्वक्षप्रकरमधिवालेयवदनम् ।
मधुस्यन्दि द्राक्षाफलकुलमिवायुर्वितथय-
न्कियत्कालं सीदान्ययि मयि कदा स्याः शिवदये॥ १९॥

க்ஷிபந்காமிந்யாதிஷ்வநவதி மிதோவைஶஸதுரா-
துராபேஷ்வேஷ்வக்ஷப்ரகரமதிவாலேயவதநம் |
மதுஸ்யந்தி த்ராக்ஷாபலகுலமிவாயுர்விததயந்
கியத்காலம் ஸீதாந்யயி மயி கதா ஸ்யாஃ
[ஶிவதயே ||

अयि शिवदये ஏ சிவ தயையே! मिथो-वैशस-धुरा-दुरापेषु ஒருவருக்கொருவர் கடுமையாய்த் துன்புறுத்தியும் அடைதற்கு அரிதாயிருக்கிற एषु இந்த कामिनी-आदिषु ஸ்த்ரீ முதலிய விஷயங்களில் अनवधि முடிவின்றி अधि-वालेय-वदनम् கழுதைவாயில் मधु-स्यन्दि தேனொழுகும் द्राक्षा-फल-कुलम् इव திராக்ஷைப்பழங்களை (எறிவதுபோல) போல अक्ष-प्रकरम् என் இந்திரியங்களை क्षिपन् எறிந்துகொண்டு, आयुः (என்) ஆயுளை वितथयन् வீணாக்கிக்கொண்டு कियत्-कालम् எவ்வளவு காலம் सीदानि கஷ்டப்படுவேன்! मयि என்னிடம் कदा எப்போது स्याः உண்டாகுவாய்?

கடவுள் நமக்களித்த புலன்கள் மிகவும் சிறந்த கருவி
கள்; அவற்ருல் நாம் அநுபவித்து அடைய வேண்டிய
பெரிய விஷயமும் அவற்றை அருளிய கடவுளே; ஆனால்
அச்சிறந்த விஷயத்தை விட்டு இந்திரியங்களைச் சிற்றின்
பங்களிலேயே நாம் செலுத்துகிருேம்; இடைவிடாமல்
ஸ்த்ரீ முதலிய இச்சிற்றின்பங்களை நாம் நாடுகிருேமே
ஒழிய, அவை நாம் விரும்பியபடி நமக்குக் கைகூடுவதில்லை;
அவற்றைப் பெற நாம் ஒருவருக் கொருவர் ஜன்மப்
பழியைக்கூட வரவழைத்துக் கொள்ள வேண்டியிருக்
கிறது; அப்படிப் பிறரைப் பகைத்துத் தேடியும் இச்
சிற்றின்பங்கள் நமக்குக் கிட்டுவதில்லை. அப்படி இருக்கும்
சிற்றின்பங்களின்மேல் நம் சிறந்த புலன்களைச் செலுத்து
வது கழுதையின் வாயில் மிகவும் ருசியான திராக்ஷையைப்
போடுவது போலாகும். இப்படி வாழ் நாட்களை வீணுக்
காமல், புலன்களைச் சிவபரமாய் மாற்றச் சிவதயையே
உதவவேண்டும்,

19. Endlessly throwing my senses on these, wife and others, hard to attain even by great mutual torment, even as one would throw honey-dripping grapes into the mouth of an ass, and wasting my life, how long am I to suffer? O Compassion of Siva! When will you appear in me?

कदा गौरीनेत्राञ्चलसमुदितानङ्गचकिता-
न्कटाक्षांस्तांस्तच्च स्मितमधरबिम्बे कृतपदम् ।
मुखं शंभोस्तच्चोन्मुदितशरदिन्दुप्रियसखं
पुरस्तादाद्रक्ष्याः पुरभिदनुकम्पे जननि मे ॥ २० ॥

கதா கௌரீநேத்ராஞ்சலஸமுதிதானங்கசகிதான்
கடாக்ஷாம்ஸ்தாம்ஸ்தச்ச ஸ்மிதமதரபிம்பே
[க்ருதபதம் |
முகம் ஶம்போஸ்தச்சோன்முதிதஶரதிந்துப்ரியஸகம்
புரஸ்தாதாதத்யா: புரபிதனுகம்பே ஜனனி மே ||

हे जननि पुरभिद्-अनुकंपे ஏ தாயே சிவதயையே! **कदा** எப்பொழுது **गौरी-नेत्र-अञ्चल-समुदित-अनङ्ग-चकितान्** பார்வதியின் கடைக்கண்ணில் தோன்றிய மன்மதனுக்குப் பயந்த **तान्** அந்த **शंभोः** சிவனுடைய **कटाक्षान्** கடைக்கண் பார்வைகளையும், **अधर-बिम्बे** கோவைப்பழம்போன்ற உதட்டில் **कृत-पदम्** இருப்புக்கொண்ட **तत्** அந்த **स्मितम् च** புன்னகையையும், **उन्मुदित-शरद्-इन्दु-प्रिय-सखम्** களிப்புற்ற சரத்கால (பூர்ண) சந்திரனைப்போன்ற **तत्** அந்த **मुखम्** முகத்தையும் **मे पुरस्तात्** என் முன் **आदध्याः** வைப்பாய்.

சிவனுடைய மூர்த்தியை நாம் ப்ரத்யக்ஷமாய்த் தர்சனம் செய்வதோ, அதை எப்போதும் நம் மனக்கண்முன் வைத்துக் கொண்டிருப்பதோ, சிவதயையின் அநுக்ரஹத்தால்தான் முடியும். விசேஷணங்களால் சிவ மூர்த்தியின் அழகும் வர்ணிக்கப்பட்டது.

20. O Mother, Compassion of Siva ! When will you place before me those glances of Siva rendered timid by the love manifesting in the corners of Parvati's eyes, that smile of Siva residing on the lip red like the Bimba fruit, and that face of Siva resembling the joyous autumnal moon ?

असावर्थः श्रेयानयमितर इत्यच्छमतिदाः
प्रजानां शर्माप्तावसुखविरहे च प्रतिभुवः ।
विभान्ति श्वासा यद्विधुशकलमौलेर्भगवत-
स्तदेतत्कल्याण्यास्तव विलसितं किं न करुणे ॥ २१ ॥

அஸாவர்த்ʼ: ஸ்ரேயாநயமிதர இத்யச்ச மதிதா:
ப்ரஜாநாம் ஶர்மாப்தாவஸுகவிரஹே ச
[ப்ரதிபுவ: ।
விபாந்தி ஶ்வாஸா யத் விதுஶகலமௌலேர்பகவத-
ஸ்ததேதத் கல்யாண்யாஸ்தவ விலஸிதம்
[கிம் ந கருணே ॥

हे करुणे ஏ தயையே! असौ अर्थः இந்த விஷயம் श्रेयान् நன்மைக்கானது, अयम् இது इतरः வேறுபட்டது इति என்று अच्छ-मति-दाः தெளிவான அறிவைக் கொடுப்பன வாயும், प्रजानाम् शर्म-आप्तौ மக்களுக்கு ஸுகம் கிட்டுவதற்கும் असुख-विरहे च துக்கம் விலகுவதற்கும் प्रतिभुवः ஜாமீன்களாயும் भगवतः विधुशकलमौलेः சிவனுடைய श्वासाः மூச்சு ரூபமான வேதங்கள் विभान्ति (इति) यत् ப்ரகாசிக்கின்றன என்ற तद् एतत् இது कल्याण्याः க்ஷேமத்தைக் கொடுக்கும் तव உன்னுடைய विललितं न किम्? லீலையல்லவா?

மக்களைப் படைத்த பகவான் அம்மக்கள் துக்கத்திற்குக் காரணமான வழிகளை விட்டு விலகி, நல்வழிக்கான ஸத்கர்மாக்களைச் செய்து ஸுகிக்குமாறு இது ச்ரேயஸ், இது அச்ரேயஸ் என்று காட்டும் வேதங்களை ஸ்ருஷ்டித்தார்; அவ்வேதங்கள் சொல்லும்படி நடந்தால்

கெட்டது நீங்கி, நல்லது கிட்டுமென்பதற்கு வேதங்களே ஜாமீன், கடவுளே ஸத்யம் செய்து கொடுப்பவர். நம்மிடம் கருணையில்லாவிட்டால் கடவுள் இவ்வாறு நம் நலனுக்குக்காகச் சிரமப்படுவாரா?

“तस्य महतो भूतस्य निःश्वसितम्” என்று வேதத்திலேயே, வேதம் கடவுளிடமிருந்து எழும் மூச்சு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ‘वेदोऽखिलो धर्ममूलम्’ என்று நம்மைத் தாங்குவதான (धारणाद् धर्म उच्यते) தர்மத்திற்கு வேதமே மூலம் என்பது சொல்லப்பட்டிருக்கிறது. “प्रतिभुवः” என்பதால் “நான் சொல்லும் காரியம் ஒன்றைச்செய், அதிலிருந்து இந்த நற்பயன் ஏற்படும்; அதற்கு நான் உத்தரவாதம்” என்று வேதம் சபதம் செய்கிறது என்கிறார் கவி.

21. That these (Vedas), the breath of the Moon-crested Lord Siva, shine forth as the bestowers of the clear knowledge that this is beneficient (Dharma) and this is different (Adharma), and as the guaranteers for the access of welfare and the removal of misery, O Compassion, is this not the play of your auspicious Self?

स्मराराते शंभो पुरहर शिवोमाधव हरे
मुरारे गोविन्दामरवर मुकुन्देत्यविरतैः ।
शिवाख्यापीयूषोर्मिभिरयि दये मां कबलितं
कदा वा कुर्वीरंस्तव गुणझरा मज्जितहराः ॥२२॥

ஸ்மராராதே ஶம்போ புரஹர ஶிவோமாதவ ஹரே
முராரே கோவிந்தாமரவர முகுந்தேத்யவிரதைঃ।
ஶிவாக்யாபீயூஷோர்மிபிரயி தயே மாம் கபலிதம்
கதா வா குர்வீரம்ஸ்தவ குணஜரா மஜ்ஜிதஹரா: ||

अयि दये ஏ தயையே! **मज्जित-हराः** சிவன் முழுகிக் கிடக்கும் **तव** உன்னுடைய **गुण-झराः** குண வெள்ளங்கள் **(हे) स्मर-अराते** ஏ மன்மத சத்ரோ **शंभो** சம்போ **पुर-हर** திருபுரங்களை ஒழித்தவரே **शिव** சிவ **उमा-धव** பார்வதீபதே **हरे** ஹரே **मुरारे** முரனை ஒழித்தவரே **गोविन्द** கோவிந்தா **अमर-वर** தேவச்ரேஷ்டா **मुकुन्द** முகுந்தா **इति** என்ற **अविरतैः** ஓய்வில்லா **शिव-आख्या-पीयूष-ऊर्मिभिः** சிவ (மங்கள மான) நாமங்களின் அமிர்த அலைகளால் **कबलितम्** விழுங்கப்பட்டவனாய் **माम्** என்னை **कदा वा** எப்பொழுது **कुर्वीरन्** செய்யும்?

இடைவிடாது பகவந் நாமகானம் செய்து அதிலேயே முழுகிக்கிடக்கும் பாக்யமும் பகவானின் தயையினால்தான் ஏற்படும்; நாமாவைச் சொல்லிவந்தால் தயை ஏற்படும்; தயை ஏற்பட்டால் நாமா சொல்லலாம் என்ற அந்யோந் யாச்ரய தோஷமில்லவே இல்லை.

"சிவாக்யா" என்ற இடத்தில் "சிவனுடைய நாமா" என்று அர்த்தம் வைத்துக் கொண்டால் ஹரி, முகுந்தன் என்ற விஷ்ணு நாமாக்களும் சிவனையே குறிக்கும் என்று வைத்துக் கொள்ளலாம்; பகவன் நாமா என்று நாமா வற்புறுத்தப்படுகிறதே ஒழிய சிவநாமா, விஷ்ணுநாமா என்ற பேதமில்லை; சிவமான, அதாவது மங்களத்தைக் கொடுக்கக்கூடிய (ஹரி, ஹர முதலிய தெய்வங்களின்), நாமா என்றே வைத்துக்கொள்ளலாம். ஆக்யாஷஷ்டிக்கு உரை எழுதிய திருவிசநல்லூர் வீரராகவர் என்றவரும்

‘சிவாக்யா’ என்ற பதத்திற்கு ஹரி ஹர ஸாதாரணமாய்ப் பொது அர்த்தம் சொல்ல வேண்டியிருக்கிறது என்று எழுதியிருக்கிறார். நாம பஜனம் செய்பவன் ஹரி ஹர பேதம் செய்யலாகாது என்று சொல்லியிருக்கிறது. (ஆக்யாஷஷ்டி முகவுரை; ஆக்யாஷஷ்டி 4-வது ஶ்லோகத்தையும் பார்க்கவும். வீரராகவ வ்யாக்யானத்துடன் காமகோடி க்ரந்தாவளியில் வெளியிட்டிருக்கும் ஆக்யாஷஷ்டியையும் பார்க்கவும்.)

22. O Compassion! When will the floods of your excellences, in which is immersed Siva Himself, engulf me with the ambrosial billows of the auspicious Names incessantly recited, Names like O Smararati (Enemy of Cupid), Sambhu (Auspicious), Purahara (Destroyer of Tripura), Siva, Umadhava (Lord of Parvati), Hara, O Murari (Enemy of demon Mura), Govinda, Chief of Gods, Mukunda!

समुन्मीलज्ज्वालाज्वलनकलितस्यान्तिकगतो
यथा तद्द्वाराद्यभिरतिहतस्यान्तिकगतः ।
असावीष्टे नोज्जीवितुमहह का तस्य तु कथा
किमन्यज्जीवातुस्त्वमसि जगतोऽस्येशकरुणे ॥ २३ ॥

ஸமுன்மீலஜ்ஜ்வாலாஜ்வலநகலிதஸ்யாந்திகமதோ
யதா தத்த்வாராத்யபிரதிஹதஸ்யாந்திகமத: |
அஸாவீஷ்டே நோஜ்ஜீவிதுமஹஹ கா தஸ்ய து கதா
கிமந்யஜ்ஜீவாதுஸ்த்வமஸி ஜகதோऽஸ்யேஶ கருணே ||

वत ஆகா! **सह-विहरद्-धर-स्मितानाम्** கூட விளையாடும் புன்னகையுடையவைகளும் **परिचरण-अधिकृत-अरविन्द-भासाम्** தாமரைக் காந்தியை தன் பணியில் வைத்துக் கொண்டவையுமான **हे भगवति करुणे** ஏ தேவி சிவதயையே! **त्वया ईरितानाम्** உன்னால் தூண்டப்பட்டவைகளான **ईश-वीक्षितानाम्** சிவனுடைய பார்வைகளின் **पथि** வழியில் **अहम्** நான் **असानि किम्** இருப்பேனா?

62. Ah! Would that I am on the pathway of the glances of Siva along which smiles sport and of which the glory of lotuses is an appointed servant, glances that have been sponsored by you!

सर्वज्ञत्वादिगुणाः
स्वात्मत्राणैकलम्पटा बहवः ।
शर्वस्य शंकराख्या-
निर्वहणं तद्दये त्वदायत्तम् ॥ ६३ ॥

ஸர்வஜ்ஞத்வாதிகுணாஃ
ஸ்வாத்மத்ராணைகலம்படா பஹவஃ ।
ஶர்வஸ்ய ஶங்கராக்யா-
நிர்வஹணம் தத்தயே த்வதாயத்தம் ॥

हे दये ஏ சிவ தயையே! **सर्वज्ञत्व-आदि-गुणाः** ஸர்வஜ்ஞத்வம் (எல்லாமறிந்த தன்மை) முதலிய (சிவனுடைய) **बहवः** பல குணங்கள் **स्व-आत्म-त्राण-एक-लम्पटाः** தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுவதொன்றிலேயே பற்றுள்ளவை; **शर्वस्य** சிவனுடைய **शंकर-आख्या-निर्वहणम्** சங்கர (நன்மையைச் செய்பவர்) என்ற பேரை நிர்வஹிப்பதென்ற **तत्** அது **त्वद्-आयत्तम्** உன்னைப் பொறுத்திருக்கிறது.

கடவுளுக்கு அவருடைய ப்ரபுத்வத்தைக் காண்பிக்கும் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்கள் பல; அந்தக் குணங்களைக் கொண்டு அவர் தன் மஹிமையில் பெரியவராய் விளங்கிக் கொண்டிருக்கலாம்; ஆனால் லோகோபகாரயாக அவர் இருந்துகொள்வது சங்கரர் என்ற பெயரால் குறிக்

கப்பட்ட குணங்களாலேயே; உலகிற்கு அவர் நன்மையைப் பயந்து, இந்த குணங்களை ஸமர்த்தித்துக் கொள்வது உலகின்பால் அவருக்குள்ள தயையினுலே; ஆகையால் 'சங்கர' என்ற நாமாவுக்கே உயிராயுள்ளது 'தயை.'

63. O Compasion of Siva ! Several are the attributes (of Siva) like Omniscience which are always anxious to safeguard themselves ; (but) the justification of the name Sankara (Giver of welfare) of Siva is dependent on you.

श्रीकण्ठाय क्ष्वेलं
रोचितवत्या दये ननु भवत्या ।
मामकमन्तुकदम्बे
केवलमम्बेह वद विलम्बः कः ॥ ६४ ॥

ஶ்ரீகண்டாய க்ஷ்வேளம்
ரோசிதவத்யா தயே நநு பவத்யா |
மாமகமந்துகதம்பே
கேவலமம்பேஹ வத விலம்ப: க: ||

हे अम्ब दये ஏ தயையே! श्रीकण्ठाय சிவனுக்கு क्ष्वेलम् விஷத்தை रोचितवत्या பிடிக்கச் செய்த भवत्या உன்னுல் इह मामक-मन्तु-कदम्बे केवलम् இந்த என் பாவக்குவியலில் மாத்திரம் (அதைச் சிவனுக்கு பிடிக்கச் செய்வதில் மாத்திரம்) कः विलम्बः என்ன தயக்கம்? वद சொல்.

சிவநாமங்களில் 'ஸ்ரீகண்டன்' என்பது மிகவும் அழகியது; கழுத்தில் விஷமுண்டதால் ஏற்பட்ட காந்தியை உடையவர் என்று அதற்குப் பொருள்; அந்தக் கழுத்து

விஷத்தழும்பு அவருக்கு உலகைக் காக்கவேண்டும் என்ற கவலையையும், அதற்காக உலகிற்கேற்பட்ட தீங்கைத் தான் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் விளக்குகிறது. "त्रैलोक्योद्भटकालकूटकवलीकारप्रकारं पुनः, स्तोतुं के प्रथमेऽपि नाम कवयः—" என்று கவிகள் வியந்து புகழும் மஹாலீலா விசேஷமிது; சிவனுக்கு உலகின்பால் உள்ள தயை ஒன்றே இக்காலகூடத்தையும் அவர் உட்கொள்ளும்படி செய்தது என்று இங்கே கவி சொல்லுகிறார்:

"தீங்கை ஏற்று, உண்டு, ஜரித்து நலனைப் பயக்கும் பெரும் தகையாளர் சிவன்; ஏ தயையே, நீ சொன்னால் அவர் காலகூடத்தையே உட்கொண்டாரே; என் பாபமோ அதிலும் மிகச் சிறிய தீங்கே; அதையும் அவர் உட்கொண்டு ஜரித்து விடட்டும்; கொஞ்சம் சொல்லு; தயங்காதே" என்று.

64. O Mother Compassion! Tell me, what is this hesitation in respect of this lump of my sins alone for you who made even poison tasteful to the blue-necked Siva?

शिव इति तद्भक्तिरिति
स्मृतिरस्य च सेति सार्तिहन्त्रीति ।
इयदवगमय्य शेषे
विरतिरियं शिवदये न ते सदृशी ॥ ६५ ॥

ஶிவ இதி தத்பக்திரிதி
ஸ்ம்ருதிரஸ்ய ச ஸேதி ஸார்த்திஹந்த்ரீதி ।
இயதவகமய்ய ஶேஷே
விரதிரியம் ஶிவதயே ந தே ஸத்ருஶீ ॥

हे शिव-दये ஏ சிவ தயையே! **शिवः इति** சிவன் என்றும் **तद्-भक्तिः इति** அவருடைய பக்தி என்றும் **सा** அந்த சிவபக்தி **अस्य** அந்தச் சிவனுடைய **स्मृतिः इति च** நினைவு என்றும் **सा** அந்தச் சிவஸ்மிருதி **आर्ति-हन्त्री इति** கஷ்டத்தைப் போக்குவது என்றும் **इयद्** இவ்வளவு **अवगमय्य** புரியும்படி செய்துவிட்டு **शेषे** உறங்கிப்போகிறாய்; **इयं विरतिः** இந்த ஓய்வு **ते** உனக்கு **न सदृशी** தகுந்ததல்ல.

சிவதயையினால் தான் சிவபக்தியும் அது நம் தாபத்தைப்போக்கும் என்ற ஞானமும் நமக்கு ஏற்படும்; ஏற்பட்டும், சிவதயை கடைசி வரைக்கும் இருந்து காப்பாற்ற வேண்டும். 'பக்திமார்க்கத்திற்கு உயிர் சிவதயையே' என்பது வற்புறுத்தப்பட்டது.

65. Siva, His devotion, that devotion as His constant thought, and that thought as destroying distress—after making us understand so much, you go to sleep; O Compassion of Siva! Stopping thus is not proper for you.

अब्जजनयितुमच्युतयितु-
मपि शिवयितुमलमुमेशकरुणे त्वम् ।
अलमसि शिवरसिकाना-
मक्षिपथे किं न मां प्रवर्तयितुम् ॥ ६६ ॥

அப்ஜஜநயிதுமச்யுதயிது-
மபி ஶிவயிதுமலமுமேஶகருணே த்வம் |
அலமஸி ஶிவரஸிகாநா-
மக்ஷிபதே கிம் ந மாம் ப்ரவர்த்தயிதும் ||

हे उमेश-करुणे ஏ சிவ தயையே! अञ्जयितुम् (ஒருவனை) ப்ரம்மதேவனைச் செய்யவும் अच्युतयितुम् விஷ்ணுவாய்ச் செய்யவும் शवयितुम् अपि சிவனைச் செய்யவும் त्वम् நீ अलम् ஸமர்த்தை; शिव-रसिकानाम् சிவனை அனுபவித்து வரும் பக்தருடைய अक्षि-पथे பார்வையில் माम् என்னை प्रवर्तयितुम् போகும்படி செய்ய किम् अलं न असि ஸமர்த்தை அல்லவா என்ன?

ப்ரம்ம, விஷ்ணு பதவிகளையும் சிவஸாரூப்யத்தை யுமே கொடுக்கவல்ல கருணைக்குச் சிவபக்த ஸங்கத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுப்பது கஷ்டமா?

66. O Compassion of Siva! You are capable of making (the Devotee) Brahma, Vishnu and Siva. Are you not capable of directing me into the ken of those that delight in Siva?

विजयस्व सिध्यतात्तव
विधुशेखरविप्रलम्भनैपुण्यम् ।
मन्मन्तुभिरुन्मिषतु च
मातः करुणे पिचण्डिलत्वं ते ॥ ६७ ॥

விஜயஸ்வ ஸித்யதாத்தவ
விதுசேகரவிப்ரலம்பநைபுண்யம் |
மன்மந்துபிருன்மிஷது ச
மாதஃ கருணே பிசண்டிலத்வம் தே ||

हे मातः करुणे! ஏ தாயே கருணையே! विजयस्व வெற்றி பெறுவாயாக! तव உன்னுடைய विधुशेखर-विप्रलम्भ-नैपुण्यम् சிவனை ஏமாற்றும் ஸாமர்த்யம் सिध्यतात् பலிக்கட்டும்;

मद्-मन्तुभिः என் பாவங்களால் ते உன்னுடைய पिचण्डिलत्वं च उन्मिषतु வயிறும் பெருக்கட்டும்.

சிவனை அவருடைய கருணையே ஏமாற்றுவது என்பது சிவனிடமிருந்து பக்தனின் பாபங்களை மறைப்பது, அவனைச் சிவனிடம் நல்லவன் போல் காண்பிப்பது; அவன் பாவங்களைத் தானே விழுங்கி விடுவதால் கருணைக்குப் பக்தரின் பாபங்களே உணவு என்றும், அதனால் பாவத்தைத் தின்று தின்று தொந்தி பெருத்துவிட்டதென்றும் கவி சொல்லுகிறார்.

67. O Mother Compassion! Victory to you and may your adeptness in deceiving Siva succeed! And may your belly become bloated with (the devouring of) my sins!

करुणे यदि मन्मन्तून्
कवलयसि न विप्रलब्धगिरिशा त्वम् ।
का मम गतिस्तवापि च
का गतिरागोभिरेव जीवन्त्याः ॥ ६८ ॥

கருணே யதி மந்மந்தூந்
கவலயஸி ந விப்ரலப்⁴த⁴கி³ரிஶா த்வம் |
கா மம க³திஸ்தவாபி ச
கா க³திராகோ³பி⁴ரேவ ஜீவந்த்யா: ||

हे करुणे ஏ சிவதயையே! विप्रलब्ध-गिरिशा சிவனை ஏமாற்றியவளாய் त्वम् நீ मद्-मन्तून् என் பாவங்களை यदि न कवलयसि விழுங்காமற்போனால் मम எனக்கு का गतिः

என்னபோக்கு ? आगोभिः एव பாவங்களாலேயே जीवन्त्याः ஜீவித்துவரும் तव अपि च உனக்கும் का गतिः என்ன போக்கு ?

முன் ச்லோகத்தில் சொன்னதையே இங்கு கவி விவரிக்கிறார் : கருணை என்பதின் லக்ஷணம் கஷ்டப்படுபவரிடம் பரிவு காட்டுவது ; அந்தப் பரிவு பலிக்கவேண்டுமானால் கஷ்டப்படுவனிடமுள்ள தோஷத்தை கவனிக்காமல் அவனைக்காப்பது ; தோஷம் தெரிந்தாலும் மன்னிப்பது ; தோஷத்தைத் தனக்குள்ளேயே ஜரித்துக்கொள்ளுவது ; ஆகையால் தயை, க்ஷமை என்ற குணங்களுக்கு தோஷமும் பாவமும் ஆஹாரமாகின்றன என்று பக்தரும் கவிகளும் வர்ணிக்கிறார்கள். இப்படிப் பாபிகள் இல்லாமற் போனால் ஈச்வரனின் பொறுமையும் அருளும் விளங்கவே இடமில்லை.

68. O Compassion! If you do not deceive Siva and swallow my sins, what go is there for me, and for you too who live exclusively on sins?

करुणे त्वदध्वगानां
कामाधा य द्विषस्तदुन्मथने ।
गिरिशं त्वयेरयन्त्या
कृतोऽस्य भीमोग्रनामसंसर्गः ॥ ६९ ॥

கருணே த்வதத்⁴வகா³நாம்
காமாதீ⁴யா யே த்³விஷஸ்தது³ந்மத²நே |
கி³ரிஶம் த்வயேரயந்த்யா
க்ருதோऽஸ்ய பீ⁴மோக்³ரநாமஸம்ஸர்க³: ||

हे करुणे ஏ தயையே! त्वद्-अध्वगानाम् உன் வழி நடப்பவருக்கு काम-आद्याः காமம் முதலிய द्विषः ये சத்ருக்கள் எவர் உண்டோ तद्-उन्मथने அவரை அடியோடு அழிக்கும் கார்யத்தில் गिरिशम् சிவனை ईरयन्त्या தூண்டிவிடும் त्वया உன்னால் अस्य இந்தச் சிவனுடைய भीम-उग्र-नाम-संसर्गः பீமன் (பயங்கரன்) உக்ரன் (கடுமையானவன்) என்ற कृतः பெயர்கள் ஒட்டும்படி செய்யப்பட்டன.

'காமாத்யா':—காம, க்ரோத, லோப, மோஹ, மத மாத்ஸர்யம் என்று ஆறு உட்பகைகள்; இவற்றை ஒழிக்கும் விஷயத்தில் சிவனுடைய பீமன், உக்ரன் என்ற நாமாக்கள் கிருதார்த்தமாகின்றன.

69. O Compassion! By prompting Siva to destroy the enemies like lust who beset those walking on your path, you have established Siva's connection with the names Bhima (Terrible) and Ugra (Fierce).

शर्वं प्रति मन्मन्तुषु
सर्वज्ञतया निवेद्यमानेषु ।
आहूय ताममुं दृढ-
मालिङ्ग्य दये नयाशु परवशताम् ॥ ७० ॥

ஶர்வம் ப்ரதி மந்மந்துஷு
ஸர்வஜ்ஞதயா நிவேத்யமாநேஷு |
ஆஹூய தாமமும் த்ருட-
மாலிங்க்ய தயே நயாஶு பரவஶதாம் ||

हे दये ஏ தயையே! **शर्वं प्रति** சிவனிடம் **सर्वज्ञतया** ஸர்வஜ்ஞதை என்றவளால் **मद्-मन्तुषु** என் பாவங்கள் **निवेद्यमानेषु** சொல்லப்படும்போது **ताम्** அந்த ஸர்வஜ்ஞதையை **आधूय** உதறித்தள்ளிவிட்டு **अमुम्** அச்சிவனை **दृढम्** நெருக்கமாய் **आश्लिष्य** தழுவிக்கொண்டு **आशु** விரைவில் **पर-वशतामनय** பரவசமாய் செய்துவிடு.

முன் சொல்லியிருக்கும்படி சிவனுடைய ஸர்வஜ்ஞதை (அதாவது எல்லாமறியும் தன்மை என்ற குணம்), தயை (எல்லாம் பொறுத்தருள்வது என்ற குணம்)—இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை; ஆகையால் இவ்விரண்டு சக்திகளையும் சக்களத்திகள் போலவும், மூத்தவள் புகார் செய்து பக்தனைப்பற்றிச் சிவனிடம் கோள் சொல்வதாயும், இளையவளான தயை ஓடி வந்து தன்னுடைய மேன்மைப்பட்ட வசீகரத்தன்மையால் தடுத்துச் சிவனைத் தன் வசப்படுத்தி, பக்தனை குழந்தையிடம் அநுகூலமாய்ச் செய்து விடுகிறாள் என்று கவி வர்ணிக்கிறார்.

70. O Compassion! When Omniscience is reporting to Siva my sins, you brush her (Omniscience) aside, clasp Siva close, and quickly overpower Him.

अहह गिरिशैकताना-

मभिलषितस्थितिमनास्रवति मयि ताम् ।

आर्तिषु भजति वर्तितु-

मर्हसि न स्वत्वमेवमीशदये ॥ ७१ ॥

அஹஹ கிரிசைகதாநா-
மபிலஷிதஸ்திதிமநாப்துவதி மயி தாம் |
ஆர்த்திஷு மஜ்ஜதி வர்த்தி-
மர்ஹஸி ந ஸ்தப்தயமேவமீசதயே ||

हे ईश-दये ஏ சிவ தயையே! अहह அந்தோ! गिरिश-एकतानाम् சிவனைக்குறித்து ஏகாக்ரமாயிருக்கும் ताम् அந்த अभिलषित-स्थितिम् விரும்பிய நிலையை मयि अनाप्तवति நான் அடையாமல், आर्तिषु துன்பங்களில் मज्जति முழுகும் போது स्तब्धम् உணர்ச்சியற்று एवम् இப்படி वर्तितुम् न अर्हसि இருப்பது உனக்குத் தகுந்ததில்லை.

71. Alas! When without getting at that desired state of exclusive concentration on Siva, I am being drowned in miseries, it is not proper for you, O Compassion of Siva, to remain thus in a heartless manner.

नागांसि यन्महान्त्यपि
गण्यन्ते गुणकणो बहु क्रियते ।
गिरिशेन तदनुगैरपि
तद्गिरिशे त्वन्निवेशतः करुणे ॥ ७२ ॥

நாகாம்ஸி யந்மஹாந்த்யபி
கண்யந்தே குணகணோ பஹு க்ரியதே |
கிரிசேந ததநுகைரபி
தத் கிரிசே த்வந்நிவேசத: கருணே ||

हे करुणे ஏ தயையே! गिरिशेन பரமசிவனாலும் तद्-अनुगैः अपि அவருடைய அடியார்களாலும் महान्ति பெரிய आगांसि अपि பாபங்களும் यद् न गण्यन्ते तत् கவனிக்கப்

படுவதில்லை என்பதும் गुण-कणः குணத் திவலையும் यद् बहु क्रियते (इति) यत् तत् பெரிதாக்கப்படுகிறது என்பதும் गिरिशे சிவனிடத்தில் त्वद्-निवेशात् நீ தங்கியிருப்பதால்.

72. O Compassion! That even enormous sins are not counted and even an iota of merit is magnified by Siva and his adherents is due to your abiding in Siva.

मतिवागपदेऽनन्ते
महेश्वरे मनननमनपूजाभिः ।
आगोभिरभावि गुणै-
रनुकम्पे तस्य तव परिष्वङ्गात् ॥ ७२ ॥

மதிவாகபதேऽனந்தே
மஹேச்வரே மநநநமநபூஜாபி: |
ஆகோபிரபாவி குணை-
ரநுகம்பே தஸ்ய தவ பரிஷ்வங்காத் ||

मति-वाग्-अपदे புத்திக்கும் வாக்குக்கும் விஷயமில்லாத अनन्ते ஒருவிதமான எல்லையுமில்லாத महेश्वरे பெருங்கடவுள் விஷயத்தில் मनन-नमन-पूजाभिः நினைப்பது, வணங்குவது, பூஜை செய்வது என்ற आगोभिः பாபங்கள் हे अनुकम्पे ஏ சிவதயையே! तस्य तव परिष्वङ्गात् நீ அச்சிவனைத் தழுவியிருப்பதால் गुणैः अभावि குணங்களாய் ஆயின!

'यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह।' என்று மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பரம்பொருள் கருணையால்

நம்மை உய்ய வைக்கவேண்டி ஸகுணமான மூர்த்தியாகி நம் பூஜைகளையும் ஸ்தோத்திரங்களையும் பெற்றுக்கொள்ளுகிறது. அந்த அகண்ட தத்வத்தை நம் புத்தியால் எண்ணுவது என்றாலே அதற்கு ஒரு வரம்பு கட்டுவதான பாபம் ஏற்படுகிறது; அதை அப்படி இப்படி என்று வர்ணிப்பதால் அதன் தன்மையைச் சுருக்கி விடுவதான பாபம் ஸம்பவிக்கிறது. ஆனால் இவற்றை எல்லாம் அப்பரம்பொருள் குணமாய் நம்மை அருளும் பொருட்டு ஏற்றுக் கொள்ளுகிறது.

73. O Compassion, by virtue of your clasping Him, Contemplation, Obeisance, Worship etc., though offences towards the Great Lord who is limitless and not within the reach of mind or speech, become meritorious.

अवरुन्धत्या करुणे
हरं त्वया तस्य मामकस्वान्तम् ।
गेहं क्रियतामयि मे
साहंक्रियताज्वरं जिहीर्षसि चेत् ॥ ७४ ॥

அவருந்த்யா கருணே
ஹரம் த்வயா தஸ்ய மாமகஸ்வாந்தம் |
கேஹம் க்ரியதாமயி மே
ஸாஹம்க்ரியதாஜ்வரம் ஜிஹீர்ஷஸி சேத் ||

हे करुणे ஏ தயையே! **मे** என்னுடைய **स-अहंक्रियता ज्वरम्** அஹங்காரக்காய்ச்சலோடு இருக்கும் தன்மையை **जिहीर्षसि चेत्** போக்க விரும்புகிறாயானால் **हरम् अवरुन्धत्या**

சிவனுடைய களத்ரமான **त्वया** உன்னால் **तस्य** அந்தச் சிவனுக்கு **मामक-स्वान्तम्** என் மனம் **गेहम्** வீடாக **क्रियताम्** செய்யப்படட்டும்.

என் அகந்தையைப் போக்கி என் உள்ளத்தில் சிவனுடன் நீ குடிகொள்ளவேண்டும் என்று கவி தயையைவேண்டிக் கொள்ளுகிறார். தயை சிவனின் மனைவி என்று சொல்லப்பட்டதால், மனைவியே கணவனுக்குத் தகுதியான வீட்டையும் வாஸஸ்தானத்தையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது முறையாதலால் அப்படிச் செய் என்று தயையைக் கேட்டுக் கொள்வது பொருத்தமே. பகவான் உள்ளத்தில் இருந்து நடத்தி வைப்பதால் அவர் அல்லவோ கர்த்தா; தான் கர்த்தா என்ற அஹங்காரம் போக, அவர் ஹ்ருதயத்தில் இருப்பதை மனிதன் அறிந்து கொள்ளவேண்டும்.

74. O Compassion! If you like to remove my fever of having the sense of I, you who are Siva's wife, make my mind His abode.

कामारिणाऽनिविष्टे
कामादिभिरशरणस्त्वहं करुणे ।
ताम्ये किल किं न त्वं
तज्ज्ञपयसि तच्च किं न वारयसि ॥ ७५ ॥

காமாரிணாऽநிவிஷ்டே
காமாதிபிரஶரணஸ்த்வஹம் கருணே |
தாம்யே கில கிம் ந த்வம்
தஜ்ஜ்ஞபயஸி தச்ச கிம் ந வாரயஸி ||

हे करुणे தயையே ! कामारिणा अनिविष्टे सति மன்மத சத்ருவான சிவன் (என்னுள்) இல்லாதபோது अशरणः து கதியில்லாத अहम् நான் कामादिभिः காமம், க்ரோதம் முதலியவற்றால் ताड्ये किल அடிபடுகிறேனே! त्वम् நீ तत् அதை किं न ज्ञपयसि (சிவனிடம்) ஏன் தெரிவிக்காம லிருக்கிறாய் ? तत् அதை किम् ஏன் न वारयसि च தடுக்காம லும் இருக்கிறாய் ?

75. O Compassion! In the absence of the Enemy of Lust, Siva, refugeless, I am beaten by Lust and the like. Why do you not inform Siva of it nor stop it yourself ?

अन्तकहरं पदं तव
हन्त दये घ्रातुमप्यनर्हं माम् ।
अकरोद्दुर्विधिरस्तु त-
दपनयने तव विलम्बनं नार्हम् ॥ ७६ ॥

அந்தகஹரம் பதம் தவ
ஹந்த தயே க்ராதுமப்யனர்ஹம் மாம் |
அகரோத் துர்விதிரஸ்து த-
தபனயனே தவ விலம்பனம் நார்ஹம் ||

हे दये தயையே! हन्त அந்தோ! दुर्विधिः கெட்ட தெய்வம் अन्तकहरम् சிவனை तव உன்னுடைய पदम् ஸ்தா னத்தை घ्रातुम् अपि முகர்ந்து பார்ப்பதற்குக்கூட अनर्हम् யோக்யதையில்லாதவனாய் माम् என்னை अकरोत् செய்து விட்டது; अस्तु இருக்கட்டும்; तत्-अपनयने அவ்விதியை

போக்குவதில் तव உனக்கு विलम्बनम् தாமதம் न अर्हम् தகுதியன்று.

76. Alas! A perverse Fate made me, O Compassion, unfit even to smell the abode of yours, Siva; well, you ought not to make any delay in setting aside that Fate.

दृष्टे मया त्वदोकसि
दृशानया सर्वमङ्गलाश्लिष्टे ।
करुणे का तव हानिः
कतिकति तद्दर्शिनस्त्वया न कृताः ॥ ७७ ॥

த்ருஷ்டே மயா த்வதோகஸி
த்ருசாநயா ஸர்வமங்களாச்லிஷ்டே |
கருணே கா தவ ஹாநி:
கதி கதி தத்தர்சிநஸ்த்வயா ந க்ருதா: ||

हे करुणे ஏ தயையே! मया என்னால் अनया दृशा இந்தக் கண்ணாலேயே त्वद्-ओकसि உன் ஸ்தானமான सर्वमङ्गला-श्लिष्टे பார்வதியால் தழுவப்பட்ட சிவன் दृष्टे பார்க்கப் பட்டுவிட்டால் तव உனக்கு का हानिः என்ன நஷ்டம்? कति कति எவ்வளவு பேர்கள் तद्-दर्शिनः அந்த உன்னிருப் பிடமான சிவனைப் பார்த்தவர்களாக त्वया உன்னால் न कृताः செய்யப்படவில்லை?

77. O Compassion! What do you lose if I see with this eye of mine that abode of yours, Siva embraced by Parvati (the all auspicious)? How many have not been enabled by you to see Him?

दुग्धार्थिनो मुनिशिशो-
र्दुग्धाम्बुनिधिर्वशं नीतः ।
जलधिरपरस्य हस्ते
जलकणतां शिवदये न तेऽस्ति भरः ॥ ७८ ॥

துக்தார்திநோ முநிஶிஶோ:
துக்தாம்புநிதிர்வஶம் நீத: |
ஜலதிரபரஸ்ய ஹஸ்தே
ஜலகணதாம் ஶிவதயே ந தேऽஸ்தி பர: ||

हे शिवदये ஏ சிவ தயையே! **दुग्ध-अर्थिनः** பால்வேண்டு மென்று கேட்ட **मुनि-शिशोः** முனி குமாரனான உபமந்யுவுக்கு **दुग्ध-अंबुनिधिः** பாற்கடலே **वशं नीतः** அவன் வசம் கொடுக்கப்பட்டது; **अपरस्य** மற்றொரு பக்தரான அகஸ்த்யருடைய **हस्ते** கையில் **जलधिः** ஸமுத்ரம் **जलकणताम् नीतः** நீர்த்திவிலையாகச் செய்யப்பட்டது! **ते** உனக்கு **भरः नास्ति** செய்ய முடியாத பெரிது ஒன்றுமில்லை.

உபமந்யு என்ற முனிசிசுவுக்குப் பாற்கடலை வழங்கிய கதையை லிங்க புராணம் 107-ஆவது அத்யாயம் முதலிய இடங்களில் கண்டு கொள்ளலாம். அகஸ்த்ய மஹரிஷி ஸமுத்ரத்தை ஆசமனம் செய்தது ப்ரஸித்தமே.

78. O Compassion of Siva! The milk-ocean was made subservient to the hermit-baby (Upamanyu) who asked for milk; and in another's palm (Agastya's), the ocean was made into a drop of water! There is no task too heavy for you.

अवतंसितेन्दुकन्दल-
माज्ञावशवर्तिपवनतपनादिम् ।
कलये दये तव शरं
कर्मपरब्रह्मगन्धिनिःश्वासम् ॥ ७९ ॥

அவதம்ஸிதேந்துகந்தல-
மாஜ்ஞாவசவர்த்திபவநதபநாதிம் |
கலயே தயே தவ ஸரம்
கர்மபரப்ரஹ்மகந்தி நிஃச்வாஸம் ||

हे दये ஏ தயையே! अवतंसित-इन्दु-कन्दलम् தலையில் அலங்காரமாய் வைத்துக் கொள்ளப்பட்ட சந்திரப் பிறையுடன் கூடியதும், आज्ञा-वशवर्ति-पवन-तपन-आदिम् தன் கட்டளைக்குட்பட்டிருக்கும் காற்று, சூரியன் முதலியவைகளோடுகூடியதும், कर्म-परब्रह्म-गन्धि-निःश्वासम् கர்மத்தாலும் ப்ரம்மத்தாலும் மணங்கொண்ட மூச்சுக் காற்றோடு கூடியதுமான तव शरम् உன் பெருக்கான சிவனை कलये நான் போற்றுகிறேன்.

'भीषास्माद् वातः पवते, भीषोदेति सूर्यः' என்றபடி சிவனுக்குப் பயந்தே காற்றடிக்கிறது, சூரியனும் உதயமாகிறான். 'अस्य महतो भूतस्य निःश्वसितम् ऋग्वेदः . . .' என்றபடி வேதங்கள் சிவனிடமிருந்து வரும் மூச்சுக் காற்றுகளே.

79. O Compassion! I seek your stream-like flow, which is adorned on the crest by a lunar shoot, to whose command the wind, Sun etc. are obedient, and whose breath is the Vedas expounding Karman and Brahman.

करुणेऽङ्गीकुर्या मां
कदाम्ब तमुमासखं चिदाकारम् ।
गलहस्तितविषयान्तर-
मासीनं मन्मतौ कदा कुर्याः ॥ ८० ॥

கருணேஸங்கீகுர்யா மாம்
கதாம்ப தமுமாஸவம் சிதாகாரம் |
கலஹஸ்திதவிஷயாந்தர-
மாஸீநம் மந்மதௌ கதா குர்யா: ||

हे अंब करुणे ஏ தாயே சிவதயையே! कदा எப்போது माम् என்னை अङ्गीकुर्याः ஏற்றுக்கொள்வாய்? तम् அந்த चिद्-आकारम् ஞான வடிவமான उमा-सखम् சிவனை गलहस्तित-विषयान्तरम् வேறு விஷயங்களை வெளியே தள்ளிவிட்டு मद्-मतौ என் புத்தியில் आसीनम् வீற்றிருப்பவராய் कदा எப்போது कुर्याः செய்வாய்?

80. O Compassion! When will you accept me? Dismissing every other object, when will you make that Siva, accompanied by Parvati and of the form of Intelligence, seated in my mind?

भयविरहमन्तकात्त्वं
प्रदिश परस्येव न मम किंतु भयम् ।
येन शिवेऽभिरतः स्यां
शिवानुकम्पे प्रसीद तदलं मे ॥ ८१ ॥

ப⁴யவிரஹமந்தகாத்த்வம்
ப்ரதிஶ பரஸ்யேவ ந மம கிந்து ப⁴யம் |
யேந ஶிவேऽவிரத꞉ ஸ்யாம்
ஶிவாநுகம்பே ப்ரஸீத³ தத³லம் மே ||

हे शिव-अनुकंपे ஏ சிவ தயையே! परस्य इव மற்றொருவனுக்குக் கொடுப்பதுபோல் मम எனக்கு त्वम् நீ अन्तकात यமனிடமிருந்து भय-विरहम् பயமின்மையை न प्रदिश கொடுக்காதே; किन्तु ஆனால் येन எந்தப் பயத்தால் शिवे சிவனிடம் अविरतः स्याम् ஈடுபட்டவனாயிருப்பேனோ (அந்த) भयम् பயத்தையே प्रदिश கொடு; प्रसीद அருள் செய்; तद् अलम् मे அது எனக்குப்போதும்.

கஷ்டம் இருந்துகொண்டே இருந்தால் கடவுளின் நினைவு இருந்துகொண்டேயிருக்கும்; யம பயம் இருந்துகொண்டே இருந்தால் யமனை அடக்கிய சிவனின் நினைவு இருந்துகொண்டே இருக்கும்; 'विपदः सन्तु नः शश्वत् यासु संस्मर्यते हरिः।' 'எந்தக் கஷ்டங்களினால் நாம் கிருஷ்ணனை நினைக்கிறோமோ, அக்கஷ்டங்கள் நமக்கு இருந்துகொண்டே இருக்கட்டும்' என்று வேண்டிக் கொள்கிறாள் குந்தி.

81. O Compassion of Siva! Don't you give me, as to another, freedom from fear of death; but give me that fear so that I may always be delighting in Siva. That is enough for me.

गौरीसखमुडुगौरं
कंदर्पसहस्रसुन्दराकारम् ।
नीलग्रीवमुदारं
निधेहि मन्मनसि तव दये पूरम् ॥ ८२ ॥

கௌரீஸகமுடுகௌரம்
கந்தர்ப்பஸஹஸ்ரஸுந்தராகாரம் |
நீலக்ரீவமுதாரம்
நிதேஹி மந்மநஸி தவ தயே பூரம் ||

हे दये! ஏ சிவ தயையே! **गौरी-सखम्** பார்வதியுடன் கூடியதும் **उडु-गौरम्** நக்ஷத்ரம்போல் வெண்மையானதும் **कन्दर्प-सहस्र-सुन्दर-आकारम्** ஆயிரம் மன்மதர்கள்போல் அழகிய உருவத்தோடுகூடியதும் **नीलग्रीवम्** கறுத்த கழுத்துடையதுமான **उदारम्** உயர்ந்ததான **तव पूरम्** உன் வெள்ளமான சிவனை **मत्-मनसि** என் மனத்தில் **निधेहि** இருக்கச் செய்.

82. O Compassion! Place in my mind that flow of yours, that exalted (Siva) consorted by Parvati, white like a star, beautiful in form like a thousand gods of love, and blue-necked.

क्रन्देयं बत कं प्रतीह बलिना कामेन कामान्तकः
कामं पश्यति पीड्यमानमपि मां कालेन कालान्तकः ।
त्वं चेत्तस्य विभोर्भवत्कृतपरिष्वङ्गैरपाङ्गैर्दये
मामामोदयसे क्षतिस्तव तु का किं स्याच्च मेऽसौ दशा ॥ ८३ ॥

க்ரந்தேயம் வத கம் ப்ரதி ஹ வலிநா காமேந
[காமாந்தக:
காமம் பஶ்யதி பீட்யமாநமபி மாம் காலேந
[காலாந்தக: |
த்வம் சேத்தஸ்ய விபோர் பவத்க்ருத-
[பரிஷ்வங்கை ரபாங்கை ர்தயே
மாமாமோதயஸே க்ஷதிஸ்தவ து கா கிம்
[ஸ்யாச்ச மேஸௌ தஶா ||

८३ இங்கே **कं प्रति** யாரைக் குறித்து **क्रन्देयम्** கதறுவேன் ? **बत** அந்தோ ! **बलिना** பலமுள்ள **कामेन** காமத்தால் **कामम् पीड्यमानम्** மிகவும் துன்புறுத்தப்பட்ட **माम्** என்னை **कामान्तकः अपि** காமனை யொழித்தவராயிருந்தும் சிவன் **पश्यति** பார்த்துக் கொண்டிருக்கிறார் ! **बलिना** பலமுள்ள **कालेन** யமனால் **पीड्यमानम् माम्** பாதிக்கப்பட்ட என்னை **कालान्तकः अपि** யமனை அடக்கியவராயிருந்தும் **पश्यति** பார்த்துக் கொண்டிருக்கிறார் ! **हे दये** ஏ சிவ தயையே ! **भवत्-कृत-परिष्वंगैः** உன்னால் தழுவப்பட்ட **तस्य विभोः** அந்தச் சிவனுடைய **अपांगैः** கடைக்கண் பார்வைகளால் **माम्** என்னை **आमोदयसे चेत्** களிக்கவைத்தால் **तव** உனக்கு **क्षतिः तु का ?** என்ன நஷ்டம் ? **मे च** எனக்கும் **असौ दशा** இந்தக் கஷ்டதசை **किं स्यात्** இருக்குமா ?

83. Alas ! To whom shall I address my wail ? The Lord, destroyer of Kama and Kala is quietly looking on me being tormented by the powerful Kama (Lust) and the powerful Kala (Death) ; if, O Compassion, you gladden me with

the glances of that Lord, embraced by you, what do you lose thereby, and will there be this plight for me?

निद्रालस्यभरो वपुष्यतिजरा दुःसङ्ग ईर्ष्यामति-
यत्र क्वापि हि कैश्चिदित्थमशुभैर्विघ्नैः परीतस्य मे ।
ईशानेऽभिरतिश्च निर्वृतिकथा क्वेशानुकम्पे कदा
दीनान्वेषिणि मां त्वदभ्युपगमो दीनाग्रगण्यं स्पृशेत् ॥ ८४॥

நித்ராலஸ்யபரோ வபுஷ்யதிஜரா து:ஸங்க
[ஈர்ஷ்யாமதி:
யத்ர க்வாபி ஹி கைச்சிதித்த-
[மசுபைர்விக்னை: பரீதஸ்ய மே |
ஈசானேऽபிரதிச்ச நிர்வ்ருதிகதா க்வேசானுகம்பே கதா
தீனான்வேஷிணி மாம் த்வதப்யுபகமோ
[தீனாக்ரகண்யம் ஸ்ப்ருசேத் ||

निद्रा-आलस्य-भरः பெரும் தூக்கம், சோம்பல் **वपुषि** உடலில் **अतिजरा** பெரும் கிழத்தனம் **दुःसङ्गः** கெட்ட ஸஹவாஸம் **यत्र क्वापि** யாரிடமாவது **ईर्ष्या-मतिः** அஸூயை கொண்ட புத்தி **इत्थम्** இப்படி **कैश्चिद् अशुभैः विघ्नैः** சில கெட்ட தடங்கல்களால் **परीतस्य** சூழப்பட்ட **मे** எனக்கு **ईशाने** சிவனிடம் **अभिरतिः** ஈடுபடுவதும் **निर्वृति-कथा च** இன்புற்றிருப்பதும் **क्व** எங்கே? **दीन-अन्वेषिणि** ஏழைகளைத் தேடும் **हे ईश-अनुकंपे** ஏ சிவதயையே! **कदा** எப்போது **दीन-अग्र-गण्यम्** ஏழைகளுக்குள் முதல்வனை **माम्** என்னை **त्वद्-अभ्युपगमः स्पृशेत्** நீ ஏற்றுக்கொள்வாய் ?

84. Sleep, heavy laziness, extreme old age, bad company, jealous disposition towards some, body or other—to me who is encircled by some evil impediments like these, wherefore will there be devotion to Siva and possibility of happiness? O Compassion of Siva who search out the pitiable! When will you come forth and touch me, the foremost among pitiable?

तरणे भवस्य शरणैषिणा मया
दुरितानि हन्त चरितान्यलं दये ।
उचितानि नव रुचितानि मानसे
लपितानि चैव कुपिताकृतीनि मे ॥ ८५ ॥

தரணே ஭வஸ்ய ஶரணைஷிணா மயா
துரிதாநி ஹந்த சரிதாந்யலம் தயே |
உசிதாநி நைவ ருசிதாநி மாநஸே
லபிதாநி சைவ குபிதாக்ருதீநி மே ||

हे दये ஏ தயையே ! भवस्य तरणे ஸம்ஸாரத்தைத் தாண்டும் விஷயத்தில் शरणैषिणा சரணத்தை விரும்பும் मया என்னால் हन्त அந்தோ दुरितानि பாபங்கள் अलम् चरितानि ஏராளமாய்ச் செய்யப்பட்டன ; उचितानि யுக்தமான விஷயங்கள் मानसे என் மனத்திற்கு नैव रुचितानि பிடிக்கவில்லை ; मे என்னுடைய लपितानि பேச்சுக்களும் कुपित-आकृतीनि கோபத்தோடுகூடியவைகளாயிருக்கின்றன.

85. O Compassion! I who desire you as refuge in the matter of crossing the Samsara, have, alas, committed enough sins; things proper have never appealed to my mind and I have spoken many an angry word.

शमनावलेपदमनावहाम्ब किं-
न्वपुषन्न खिन्नवपुषं मृकण्डुजम् ।
भवती मदीयभवतीव्रतापहृ-
त्तरुणेन्दुचूडकरुणे न किं भवेत् ॥ ८६ ॥

ஶமநாவலேபதமநாவஹாம்ப கிம்-
ந்வபுஷந்ந கி²ந்நவபுஷம் ம்ருகண்டுஜம் ।
஭வதீ மதீ³யப⁴வதீவ்ரதாபஹ்ரு-
த்தருணேந்து³சூட³கருணே ந கிம் ப⁴வேத் ॥

हे अंब तरुणेन्दुचूड-करुणे ஏ தாயே சிவ தயையே! शमन-अवलेप-दमन-आवहा யமனுடைய கர்வத்தை அடக்கிய भवती நீ खिन्न-वपुषम् கஷ்டப்பட்ட मृकण्डुजम् மார்க்கண்டேயனை अपुषन् न किम् காக்கவில்லையா? किम् मदीय-भव-तीव्र-तापहृत् न भवेत् என்னுடைய பெரும் ஸம்ஸார தாபத்தைப் ஏன் போக்கடிக்கவில்லை?

86. O Compassion of Siva! Putting down the haughtiness of Death, did you not, O Mother, protect Markandeya whose body was in throes? Why do you not remove my acute anguish of Samsara?

उचितं तवोपरचितं दये न किं
प्रबलापराधकबलार्पणं मया ।
अयि शर्वमम्ब मयि शर्मदं न किं
वितनोषि शंस बत नो यशोऽस्त्यतः ॥ ८७ ॥

உசிதம் தவோபரசிதம் தயே ந கிம்
ப்ரபலாபராதகபலார்ப்பணம் மயா |
அயி ஶர்வமம்ப மயி ஶர்மதம் ந கிம்
விதநோஷி ஶம்ஸ வத நோ யஶோऽஸ்த்யத: ||

अयि दये ஏ தயையே ! तव உனக்கு उचितम् பொருத்தமான प्रबल-अपराध - कबल - अर्पणम् கடும்பாவங்களாகிற ஆகார கபளங்களை ஸமர்ப்பிப்பது किं न उपरचितम् செய்யப்படவில்லையா ? शर्वम् சிவனை मयि என் விஷயத்தில் शर्म-दम् இன்பத்தைக் கொடுப்பவனாக किं न वितनोषि ஏன் செய்யவில்லை ? बत அந்தோ ! अतः அப்படிச் செய்தால் यशः புகழ் न अस्ति (உனக்கு) இல்லையா ? शंस சொல்லு.

கடவுளின் கருணைக்கு நம் பாவங்களே ஆகாரம் என்று முன் சில ச்லோகங்களிலும் சொல்லப்பட்டது.

87. O Compassion! Have I not done to you what is proper to you, viz., offer lumps of (my) heinous sins as food? Why do you not make Siva grant happiness to me? Tell me, is it not to your fame if you do so?

गरले हरस्य तरलेतरां रुचिं
भवतीं दयेऽर्पितवती न मेंऽहसि ।
उदितादरात्र विदिता करालता
महिता न सा किमहितावहा तव ॥ ८८ ॥

கரலே ஹரஸ்ய தரலேதராம் ருசிம்
பவதீ தயேர்பிதவதீ ந மே஽ம்ஹஸி |
உதிதாதராத்ர விதிதா கராலதா
மஹிதா ந ஸா கிமஹிதாவஹா தவா ||

हे दये ஏ தயையே ! हरस्य சிவனுக்கு गरले காலகூட விஷத்தில் तरल-इतराम् ஸ்திரமான रुचिम् ருசியை भवती நீ अर्पितवती கொடுத்தாய், मे என்னுடைய अंहसि பாவத்தில் रुचिम् ருசியை न अर्पितवती கொடுக்கவில்லை ; अत्र இந்த விஷத்தின்மேல் उदित-आदराविदिता நீ ஆதரவு உள்ளவள் என்று தெரியும் ; तव உனக்கு अहित-आवहा ஆபத்தை விளைவிக்கும் सा அந்த (விஷத்தின்) करालता பயங்கரமான கடுமை न किं महिता உன் கௌரவத்திற்குப் பாத்திரமல்லவா ?

உலகை உய்யவைக்கப் பரமசிவனுக்கு ஏற்பட்ட கருணையே பரமசிவனைக் கடையப்பட்ட கடலிலிருந்து எழுந்த காலகூடத்தைக் குடிக்கும்படி செய்தது; அக்கால கூட விஷத்தைக் காட்டிலும கடுமையானதா என் பாவச் செயல்கள்; நீ ஏற்று ஜரித்துவிட, என்று கவி கேட்கிறார்! கால கூடத்தை உண்டதால் பரமசிவனுக்கே ஆபத்து வந்திருக்கக்கூடும்; அதன் மூலம் தயாதேவியான நீயே ஆச்ரயமின்றிப் போயிருப்பாய்; அப்படியிருந்தும் அவ்

விஷத்தின் கொடுமை உனக்குப் பிடித்தது; மிகச் சிறிதான என் பாபத்தின் தீங்கு உனக்குப் பிடிக்கவில்லை போலும்!

88. O Compassion! You made Siva have a strong liking for poison, not for my sin; you are known for your favour towards that poison; do you not esteem its terrible nature though it was about to bring danger to you?

कलिनामुनातिबलिना कदर्थितः
स्वहिते क्षमो न विहितेऽस्मि मादृशाम् ।
अवने श्रमस्तु तव नेशितुर्दये
जगति त्वयैव सगतिस्तदस्म्यहम् ॥ ८९ ॥

கலிநாமுநாதிபலிநா கதர்த்தித:
ஸ்வஹிதே க்ஷமோ ந விஹிதேऽஸ்மி
[மாத்ருசாம் ।
அவநே ச்ரமஸ்து தவ நேசிதுர்தயே
ஜகதி த்வயைவ ஸகதிஸ்ததஸ்ம்யஹம் ॥

हे ईशितुः दये ஏ சிவ தயையே! अमुना இந்த अतिबलिना மிகவும் வலுத்த कलिना கலியினால் कदर्थितः விணைக்கப்பட்ட (நான்) स्व-हिते தனக்கு நன்மையான विहिते விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்வதற்கு न क्षमः अस्मि முடியாதவனாயிருக்கிறேன்; मादृशाम् என் போன்றவர்களை अवने காப்பதில் तव तु உனக்கோ श्रमः न ச்ரமம் இல்லை; तद् ஆகையால் जगति இவ்வுலகில் त्वया एव உன்

னாலேயே **स-गतिः** கதியுள்ளவனாய் **अहम् अस्मि** நான் இருக்கிறேன்.

89. Thwarted by this powerful Kali age, I have been rendered incapable of doing the prescribed duties that are to my own good; as, O Compassion of Siva! it is not difficult for you to protect people like me, I have you alone as my refuge in this world.

वलभेदनादिसुलभेतरं हरं
स्मरतो दलाम्बु किरतोऽपि निर्वसोः ।
नयसे वशं कलयसेऽद्भुतं दये-
ऽहमसावपीह किमसानि ते पदम् ॥ ९० ॥

வலபேதநாதிஸுலபேதரம் ஹரம்
ஸ்மரதோ தலாம்பு கிரதோऽபி நிர்வஸோ: |
நயஸே வசம் கலயஸேऽத்புதம் தயே-
ऽஹமஸாவபீஹ கிமஸாநி தே பதம் ||

हे दये ஏ தயையே! **वलभेदन-आदि-सुलभ-इतरम्** இந்திரன் முதலியோருக்குங் கிடைப்பதற்கரிதான **हरम्** பரமசிவனை **निर्वसोः** செல்வமற்றவனும் **दल-अम्बु** ஒரு புஷ்ப, பத்ர தளத்தையோ ஒரு துளி ஜலத்தையோ **किरतः अपि** இறைப்பவனும் **स्मरतः** (மனத்தில்) நினைப்பவனுமான ஒருவனுக்கு **वशम् नयसे** வசமாகச் செய்கிறாய்; **अद्भुतम् कलयसे** அற்புதத்தை நடத்திக் காட்டுகிறாய்; **असौ अहम् अपि** இந்த நானும் **इह** இதோ **ते** உன்னுடைய **पदम्** இருப்பிடமாக **असानि किम्** ஆவேனோ?

'पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति।' என்று கீதாசார்யன் சொன்னபடி ஒரு தளத்தையோ ஒரு துளி ஜலத்தையோ ஒருவன் ஈச்வரார்ப்பணம் செய்தா லும், இல்லை, மனத்தினுள் சற்று ஈச்வரனை நினைத்தா லும் போதும், அவனுக்கு ஈச்வரன் தன்னை அதீனமாகச் செய்து கொள்ளும்படி அவருடைய தயை அவரை நிர்ப் பந்திக்கிறது. அப்படி லகுவாய் வழிபடுபவருக்கும் வழி விடும் நீ அந்த கோஷ்டியில் சேர்ந்தவனான என்னையும் உனக்கு விஷயமாய்ச் செய்துகொள்வாய் என்று கவி தயையை வேண்டிக் கொள்ளுகிறார்.

90. O Compassion! That Siva who is hard of attainment even to those like Indra, you bring under the control of one who thinks of Him, who is without any wealth and casts but a leaf and a drop of water (for Him)! You (really) do a wonder! Here, will I too become a fit object for you?

स्मरणं प्रणामकरणं तथाभिधा-
गदनं च जातुचिदनङ्गवैरिणः।
परमं भवार्तिहरमम्ब देहिनां
त्वदये गतिस्तव दये गरीयसी ॥ ९१ ॥

ஸ்மரணம் ப்ரணாம கரணம் ததாபிதா-
கதனம் ச ஜாதுசிதனங்கவைரிண: |
பரமம் பவார்த்திஹரமம்ப தேஹிநாம்
த்வதயே கதிஸ்தவ தயே கரீயஸீ ||

आतुचित् எப்போதோ ஒருபோது अनङ्गवैरिणः स्मरणम् வனுடைய நினைவு प्रणाम-करणम् சிவனுடைய வணக்கம் तथा अभिधा-गदनम् சிவனுடைய பேரைச் சொல்வது— (இவை), अयि अम्ब ஏ தாயே त्वत् உன் காரணத்தால் देहिनाम् மனிதருக்கு परमम् மேலான भव-आर्ति-हरम् பிறவிக்கஷ்டத்தைத் தவிர்ப்பதாக ஆகின்றன ; हे दये ஏ சிவ தயையே ! तव உன்னுடைய गतिः போக்கே गरीयसी மேலானது.

91. O Compassion! The occasional contemplation of Siva, doing obeisance to Him or the mention of His Name, becomes the supreme means of removing the transmigratory toil, because of you. O Mother, your way is indeed, great !

भवतापभीतमवताखिलं जनं
पुरमर्दनेन परमर्ज्यते यशः ।
घनमम्ब यद्भुवनमङ्गलं दये
तदये श्रमच्छिदुदये त्वदाश्रयात् ॥ ९२ ॥

பவதாபபீதமவதாகிலம் ஜநம்
புரமர்தநேந பரமர்ஜ்யதே யச: ।
கநமம்ப யத்புவநமங்கலம் தயே
ததயே ச்ரமச்சிதுதயே த்வதாச்ரயாத் ॥

भव-ताप-भीतम् ஸம்ஸார கஷ்டங்களிலிருந்து பயந்த अखिलम् எல்லா जनम् மானிடரையும் अवता காப்பாற்றும் पुरमर्दनेन परम् சிவன் தன்னால் घनम् பெரிதாயும் भुवन-मङ्गलम् உலகிற்கு நலன் பயப்பதுமான यशः புகழ் अर्ज्यते

यत् ஸம்பாதிக்கப்படுவது, **श्रम-च्छिद्-उदये** ச்ரமத்தைச் போக்கும் தோற்றத்தோடுகூடிய **हे दये** ஏ சிவ தயையே! **त्वद्-आश्रयात्** உன்னுடைய ஆச்ரய பலத்தாலேயே.

92. O Mother Compassion whose manifestation destroys all troubles! If Siva acquires fame, substantial and beneficial to the Universe, by protecting all those who are scared by the suffering of this Samsara, it is be canse of your support.

भुवने तवाम्ब नवने पटुर्दये
परमत्र को नु शरमज्जितः स ते ।
श्रितमन्तुशैलशतमन्तकान्तको-
ऽखिलवेदिता न किल वेदितुं क्षमः ॥ ९३ ॥

ஹுவனே தவாம்ப நவனே படுர்தயே
பரமத்ர கோ நு ஸரமஜ்ஜிதஃ ஸ தே ।
ச்ரிதமந்து சைலசதமந்தகாந்தகோ-
ऽகிலவேதிதா ந கில வேதிதும் க்ஷமஃ ॥

हे अम्ब दये ஏ தாயே தயையே! **ते** உன்னுடைய **शर-मज्जितः** வெள்ளத்தில் முழுகிப்போய் **स** அந்த **अखिल-वेदिता** எல்லாவற்றையும் அறியும் **अन्तकान्तकः** சிவனும் **श्रित-मन्तु-शैल-शतम्** ஆச்ரிதர்களுடைய மலைபோலப் பெரிதான நூற்றுக்கணக்கான பாபங்களையும் **वेदितुम्** தெரிந்து கொள்ள **न क्षमः किल** ஸமர்த்தரல்லவே! **अत्र भुवने** இவ்வுலகில் **को नु** யார் தான் **तव** உன்னுடைய **नवने** துதியில் **परं पटुः** மிகவும் ஸமர்த்தர்?

ஸர்வஜ்ஞருக்கே பக்தரின் தோஷம் தெரியாதபடிச் செய்துவிடும் தயையின் பெருமையை யார் தான் புகழ முடியும்?

98. That Siva, the Destroyer of Death and the knower of everything, submerged by your flood, becomes incapable of knowing the sins of your refugees, though the sins are by hundreds and are like mountains,—whoever is capable enough in this world to extol you, O Compassion!

मनसेह सर्वमनसेव यद्वहे
हरमेकमेव न रमे हि विस्मरन् ।
तदिमं त्वमेव हृदि मन्तुमाशु मे
करुणे यतस्व तरुणेन्दुशेखरम् ॥ ९४ ॥

மநஸேஹ ஸர்வமநஸேவ யத்வஹே
ஹரமேகமேவ ந ரமே ஹி விஸ்மரந் |
ததிமம் த்வமேவ ஹ்ருதி மந்துமாசு மே
கருணே யதஸ்வ தருணேந்துசேகரம் ||

अनसा इव வண்டியிற்போல் **मनसा** என் மனத்தில் **इह** இதோ **सर्वम्** எல்லாவற்றையும் **वहे** வஹிக்கிறேன்; **हरम् एकम् एव** சிவன் ஒருவனைமட்டும் **न** (**वहे**) வஹிக்கிறதில்லை; **विस्मरन्** (சிவனை) மறந்து **रमे हि** விளையாடுகிறேன் (**इति**) **यत् तत्** என்ற இந்தக் காரணத்தால் **हे करुणे** எ தயையே! **मे** என்னுடைய **हृदि** ஹ்ருதயத்தில் **इमम्** இந்த **तरुणेन्दु-शेखरम्** சிவனை **मन्तुम्** (நான்) த்யானஞ் செய்யும் பொருட்டு **त्वम् एव** நீயே **आशु** சீக்கிரம் **यतस्व** முயற்சி செய்.

94. In my mind, as in a cart, I carry everything! Siva alone I do not carry; I sport about forgetting Him; therefore, you yourself, O Compassion, strive to make my heart think of that Siva.

किमतो ममाम्ब विमतो भवार्णव-
स्तुदतीह मां न नुदतीदृशं शुचम् ।
गिरिजापतेरुपरि जातु मे दये
हृदयं कुरुष्व सदयं च तं च माम् ॥ ९५ ॥

கிமதோ மமாம்ப விமதோ ஹவார்ணவ-
ஸ்துததீஹ மாம் ந நுததீத்ருசம் சுசம் |
கிரிஜாபதேருபரி ஜாது மே தயே
ஹ்ருதயம் குருஷ்வ ஸதயம் ச தம் ச மாம் ||

हे अम्ब दये ஏ தாயே தயையே! किमतः வேறு என்ன வேண்டும்? मम எனக்கு विमतः ப்ரதிகூலமான भव-अर्णवः ஸம்ஸாரம் इह இதோ माम् என்னை तुदति துன்புறுத்துகிறது; ईदृशम् இவ்வகையான शुचम् துயரத்தை न नुदसि நீ போக்கடிக்கமாட்டேன் என்கிறாய்; गिरिजापतेः उपरि பரமசிவன்மேல் जातु ஒருபொழுதாவது मे என்னுடைய हृदयम् ஹ்ருதயத்தை कुरुष्व இருக்கச் செய்; तम् அந்தச் சிவனை सदयम् என்னிடம் தயையுள்ளவராகவும் माम् च என்னையும் सदयम् அவருடைய தயையைப் பெற்றவனாகவும் कुरुष्व செய்.

95. What more than this! The sea of Samsara, my enemy, torments me and you do not

remove such a sorrow. O Mother, Compassion! place my heart once at least on Siva; make him compassionate (towards me) and me the recipient of his compassion.

चरणं नतार्तिहरणं विभोर्दये
नृतमो भजेत कतमो विना त्वया ।
तदमुं तवाम्ब पदमुन्नतं नय
प्रभवे मदर्थिविभवेऽर्थिनी भव ॥ ९६ ॥

சரணம் நதார்த்திஹரணம் விபோர்தயே
ந்ருதமோ பஜேத கதமோ விநா த்வயா |
ததமும் தவாம்ப பதமுந்நதம் நய
ப்ரபவே மதர்த்திவிபவேऽர்த்திநீ பவ ||

हे अम्ब दये ஏ தாயே தயையே! त्वया विना நீ அல்லாமல் नृतमः சிறந்தவனாயிருந்தும் மனிதன் कतमः எவன்தான் विभोः கடவுளின் नत-आर्ति-हरणम् வணங்கியவரின் சிரமத்தைப் போக்கும் चरणम् அடியை भजेत அடைவான்? तत् ஆகையால் अमुम् இந்த என்னை तव உன்னுடைய उन्नतम् உயர்ந்ததான पदम् ஸ்தானமான சிவனிடம் नय கொண்டு போ; मद्-अर्थि-विभवे யாசிக்கும் நான் செல்வமடையும் பொருட்டு प्रभवे கடவுளிடம் अर्थिनी भव நீ யாசிப்பவளாய் ஆகுக.

96. O Compassion! Without you which man, eminent though he is, can attain the feet of the Lord that destroys the distress of the obeisant? Therefore, lead me to that high place of yours

(viz., Siva) and, for the sake of the prospriety of this supplicant, namely myself, you become a supplicant to that Lord.

कमलासनश्च कमलापतिश्च ते
कलयाप्नुतां हि तुलया विहीनताम् ।
स्वकरावलम्बसुकरामृतश्रियं
कुरु मे कुलेशितुरुमेशितुर्दये ॥ ९७ ॥

கமலாஸநஶ்ச கமலாபதிஶ்ச தே
கலயாப்நுதாம் ஹி துலயா விஹீநதாம் |
ஸ்வகராவலம்பஸுகராம்ருத ஶ்ரியம்
குரு மே குலேஶிதுருமேஶிதுர்தயே ||

कमलासन: च *ப்ரம்மாவும்* **कमला-पति: च** *விஷ்ணுவும்* **तुलया** *நிறையில்* **ते** *உனக்கு* **कलया** *சிறிது* **विहीनताम् आप्नुताम् हि** *குறைவு பட்டவரே;* **हे दये** *தயையே!* **मे** *என்னுடைய* **कुल-ईशितु:** *குலக்கடவுளான* **उमा-ईशितु:** *சிவனுடைய* **स्व-कर-अवलम्ब-सुकर-अमृत-श्रियम्** *அவர் தன் கையால் என்னைப் பிடித்துக்கொள்வதான லகுவான அழிவற்ற ஐச்வர்யத்தை* **कुरु** *எனக்குச் செய்து வை.*

97. O Compassion of Siva, my family deity! Brahma and Vishnu are slightly inferior to you in measure; grant me that affluence of immortality that comes easily by your merely taking me by your hand.

अपराधजालमपरा नुदेत का
भवतीं विनोद्धृतवतीं जगद्दये ।
जननीं प्रमोदजननीमृते शिशोः
शमलं प्रमार्जितुमलं परा तु का ॥ ९८ ॥

அபராதஜாலமபரா நுதேத கா
பவதீம் விநோத்த்ருதவதீம் ஜகத்தயே |
ஜநநீம் ப்ரமோதஜநநீம்ருதே ஶிஶோ:
ஶமலம் ப்ரமார்ஜிதுமலம் பரா து கா ||

हे दये தயையே! जगत् உலகை उद्धृतवतीं विना கை தூக்கிவிட்ட भवतीं विना உன்னைத் தவிர का अपरा வேறு யார் अपराध-जालम् தவறுக் குவியலை नुदेत தள்ளிவிடுவர்? प्रमोद-जननीम् இன்பத்தைப் பயக்கவல்ல जननीम् ऋते தாயை யன்றி का परा तु வேறு யார்தான் शिशोः குழந்தையின் शमलम् மலத்தை प्रमार्जितुम् துடைக்க अलम् வல்லவள்?

98. O Compassion! Without you who have uplifted the Universe, who can brush aside the mass of sins? Without the joy-giving mother, who else can wipe off the dirt of the child?

उमापतिरमापती मम शिव जहीतां मनो
न जातु करुणे यथा कुरु तथैव बुद्धिं दृढाम् ।
तथैव रसनाममूं शिवशिवेति वागुद्धरां
न चैतदुभयं विना किमपि मेऽभिलाषास्पदम् ॥ ९९ ॥

உமாபதிரமாபதீ மம ஶிவௌ ஜஹீதாம் மனோ
ந ஜாது கருணே யதா குரு ததைவ
[புத்திம் த்ருடாம் |
ததைவ ரஸநாமமூம் ஶிவஶிவேதிவாகுஜ்ஜ்வலாம்
ந சைததுபயம் விநா கிமபி மேபிலாஷாஸ்-
[பதம் ||

हे करुणे ஏ தயையே! मम எனக்கு शिवौ இருவரும் ஒரே சிவனே போலிருக்கும் (அல்லது நன்மையைக் கொடுக்கும்) उमापति-रमापती சிவனும் விஷ்ணும் जातु ஒரு போதும் मनः மனத்தை यथा எவ்விதம் न जहीताम् விடமாட்டார்களோ तथा அப்படி बुद्धिम् என் புத்தியை दृढाम् ஸ்திரமாய் कुरु செய் ; तथा एव அதுபோலவே अमूम् இந்த रसनाम् (என்) நாவையும் शिव-शिव-इति-वाग्-उज्वलाम् 'சிவ-சிவ' என்ற வார்த்தையே மேலிட்டதாய் कुरु செய் ; एतत् இந்த उभयम् विना இரண்டையும் தவிர किमपि வேறொன்றும் मे என்னுடைய अभिलाष-आस्पदम् न விருப்பத்திற்கு இடமானதில்லை.

'மம ஶிவௌ உமாபதி-ரமாபதீ' என்பதால் பக்தருக்கு இருக்கும் மூர்த்தி-அபேத மனப்பான்மை வெளியாகிறது.

99. O Compassion! Give me that steadfast mind that Siva and Vishnu, both alike Siva to me, may never leave my mind; even so, make this tongue of mine utter 'Siva, Siva'; barring these two, there is nothing else that is the object of my desire.

प्रसीद करुणेऽधुना मनसि मे शिवं स्थापया-
नपायिनमुमासखं कुरु च मय्यनुग्राहकम् ।
तथानिशमिहासनं शिवपदस्य जिह्वाञ्चले
ददस्व मम काङ्क्षितद्वयमिदं त्वदेकायनम् ॥ १०० ॥

ப்ரஸீத கருணேऽதுநா மநஸி மே ஶிவம் ஸ்தாபய-
நபாயிநமுமாஸகம் குரு ச மய்யநுக்ராஹகம்
ததாநிஶமிஹாஸநம் ஶிவபதஸ்ய ஜிஹ்வாஞ்சலே
ததஸ்வ மம காங்க்ஷிதத்வயமிதம் த்வதேகாயநம்॥

हे करुणे ஏ தயையே! **प्रसीद** அருள் செய்; **अधुना** இப்போது **उमा-सखं** பார்வதியோடுகூடிய **अनपायिनम्** அழிவில்லாத **शिवम्** பரமசிவனை **मे** என்னுடைய **मनसि** மனத்தில் **स्थापय** நிலைபெறச் செய்; **मयि** என்பால் **अनुग्राहकम् च** அருள் செய்பவராயும் (அந்த சிவனை) **कुरु** செய். **तथा** அப்படியே **इह** இங்கே **जिह्वा-अञ्चले** (என்) நாவின் நுனியில் **शिव-पदस्य** சிவன் என்ற சொல்லிற்கு **आसनम्** இருப்பை **ददस्व** கொடு. **इदम्** இந்த **मम** என்னுடைய **काङ्क्षित-द्वयम्** விருப்பங்கள் இரண்டும் **त्वद्-एक-अयनम्** உன்னால் மட்டுமே கிடைக்கக் கூடியதாயிருக்கிறது.

மனத்தில் சிவாநுஸந்தானம், நாவில் சிவோச்சாரணம் வேறு ஒன்றும் வேண்டியதில்லை என்று பக்தர் சிவதயையை இவ்விரண்டு விருப்பங்களை தனக்கு அருளும்படி வேண்டிக் கொள்ளுகிறார்.

100. O Compassion! Please, establish now in my mind Siva, the Imperishable Lord, accompanied by Parvati, and make Him gracious towards me;

and also make the word 'Siva' seated always on the tip of my tongue; these two desires of mine are dependent on you alone.

कालेऽन्तिमे शिवदये मम ते प्रसादा-
देतावदेव हृदये दृढमाविरस्तु ।
यद्द्व्यक्षरं शिवशिवेति तवास्पदीयं
मोक्षप्रदं भुवनमङ्गलनामधेयम् ॥ १०१ ॥

காலேऽந்திமே ஶிவதயே மம தே ப்ரஸாதா-
தேதாவதேவ ஹ்ருதயே த்ருடமாவிரஸ்து ।
யத்த்வ்யக்ஷரம் ஶிவஶிவேதி தவாஸ்பதீயம்
மோக்ஷப்ரதம் புவநமங்கள நாமதேயம் ॥

हे शिव-दये ஏ தயையே! तव உனக்கு आस्पदीयम् இருப்பிடமான शिव-शिव इति 'ஶிவ, ஶிவ' என்ற यद् எந்த द्वि-अक्षरम् இரண்டு எழுத்துக்கள் கொண்ட मोक्ष-प्रदम् வீட்டைவழங்கக்கூடியதும் भुवन-मङ्गल-नामधेयम् உலகிற்கே மங்களகரமுமான பெயர் உண்டோ एतावद् एव அது மட்டுமே ते உன்னுடைய प्रसादात् அருளால் मम என்னுடைய अन्तिमे काले இறுதிப்போதில் हृदये (என்) மனத்தில் दृढम् உறுதியாய் आविरस्तु தோன்றட்டும்.

'यं यं वापि स्मरन् भावं त्यजत्यन्ते कलेवरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥'

என்று பகவத் கீதையிலும் (8, 6) 'यथाक्रतुरस्मिन् लोके पुरुषो भवति, तथेतः प्रेत्य भवति' என்று சாந்தோக்யோபநிஷத்திலும் (3, 14, 1) சொல்லப்பட்ட தத்க்ரதுந்யாயத்தின்படி எந்த நினைவு கடைசி நேரத்தில் மனிதனுக்கு

இருக்கிறதோ அதாகவே அவன் ஆகிறான் என்பது சாஸ்த்ரமாதலால், பக்தர் தன் கடைசிக் காலத்தில் சிவஸ்மிருதி தனக்கு வழுவாமல் நிற்கவேண்டுமென்று கடைசி ச்லோகத்தில் வேண்டிக்கொள்ளுகிறார்.

101. O Compassion of Siva! In my last moment, by your grace, may this much appear in my heart, viz., this two lettered (name) 'Siva, Siva', your abode, the giver of Release, a Name that is auspicious to the (whole) Universe.

एवं दयास्तवमिमं पठतां हि भक्त्या-
रोग्यायुरच्छशिवभक्तिधनर्द्धिविद्याः ।
अग्र्यान्सुतानपि यशश्च विमुक्तिमन्ते
श्रीपार्वतीशकरुणा दिशति प्रहृष्टा ॥ १०२ ॥

ஏவம் தயாஸ்தவமிமம் ப஠தாம் ஹி பக்த்யா-
ரோக்யாயுரச்ச சிவபக்தி தனர்த்தி வித்யா: ।
அக்ர்யான்ஸுதானபி யசச்ச விமுக்திமந்தே
ஸ்ரீ பார்வதீசகருணா திசதி ப்ரஹ்ருஷ்டா ॥

एवं இப்படி **इमम्** இந்த **दयास्तवम्** (சிவ) தயையைப்பற்றிய ஸ்துதியை **भक्त्या** பக்தியோடு **पठताम्** படிப்பவர்களுக்கு **आरोग्य-आयुर्-अच्छशिवभक्ति-धनर्द्धि - विद्याः** நோயின்மை, ஆயுள், மாசற்ற சிவபக்தி, பணச்செழிப்பு, படிப்பு இவைகளையும் **अग्र्यान् सुतान् अपि** சிறந்த பிள்ளைகளையும் **यशः च** கீர்த்தியையும் **अन्ते** இறுதியில் **विमुक्तिम्** மோக்ஷத்தையும் **प्रहृष्टा** களிப்புற்ற **श्रीपार्वतीश-करुणा** சிவ தயையானது **दिशति हि** அளிக்கிறது!

இஹபர நலன்கள் எல்லாவற்றிற்குமே சிவதயை ஒன்றே காரணம்; சிவதயை திருப்தியடைந்து இவற்றை நமக்கு வழங்க நாம் அதையே வழிபடுவோமாக.

102. To those who read this Hymn on the Compassion (of Siva) with devotion, the Compassion of Siva, in great joy, gives health, long life, pure devotion to Siva, material prosperity, learning, foremost sons, fame and finally spiritual release.

इति श्री श्रीधरवेंकटेश (अय्यावाळ्) विरचितम्
दयाशतकम् संपूर्णम् ॥

இப்படி ஸ்ரீ அய்யாவாள் என்ற ஸ்ரீதர வேங்கடேசர் இயற்றிய
தயாசதகம் முற்றிற்று

Thus ends the '**Century on the Lord's Compassion**', a hymn

BY

Sri Sridhara Venkatesa known as Sri Ayyaval

ERRATA

Page	Line	*Read*
1	6	-मार्तीः
,,	7	किंकरयति
2	17	शैल
4	14	செய்தாலொழிய
5	5	गुणाश्रगति
7	23	कथय சொல்லு
11	2	by virulent poison
12	12	जिह्वयैतद्-
14	9	हे शम्भोः दये வ சிவ தயையே
20	13	-क्षन्त्री
,,	17	-க்ஷர்த்ரீ
,,	23	अक्षन्त्री
23	10	அவர்கள்
,,	18	head with a bow
,,	21	-शौर्यं
24	24	O compassion of Siva ! The
27	11	வுகட்டில்

Page	Line	*Read*
32	8	ईह्ये
33	8	மஞ்ஜயதா தே
,,	24	compassion
34	12	ந ம ஸ் தே ச ர் ஹறவி
37	14	க்ஷமித்தாலொழிய
41	13	beneficent
45	24	-सिज्ञौ
46	4	வலிஞ்யள
,,	21	unparalleled
52	15	விஸாமேதம்
53	9	recipient
56	8	நீயில்
59	6	serpents
62	4	त्वं न हास्यसि
68	11	என்ன தயக்கம்
73	6	even as on the jewelled courts of the mansions

Page	Line	*Read*
76	5	compassion
,,	18	வ தாயே தயை யே
79	3	शिवयितुं . . . . त्वं हि
81	19	ये
91	17	पचते
96	12	ஹிரதி-
97	2	some-
,,	8	the pitiable
,,	11	नैव
,,	12	चैव
99	11	मया என்றல் किं
,,	15	नो अस्ति
100	2	-चती न
,,	8	தவ
101	23	अचने
102	14	स्मरतो
105	1	ச்ரமத்தைப்
,,	2	अये अम्ब दये வ தாயே சிவ...
,,	8	because
107	4	speedily strive
,,	7	नुदसी-
108	24	destroy
109	1	prosperity
110	9	*delete* विना
,,	20	रमापति...शिवौ
111	8	விஷ்ணுவும்
112	5	ஸ்யாபயா-
113	12	சிவ தயையே
,,	14	கொண்டதாம்
114	11	ஸ்தவமிமம்